பக்கங்கள்:-பத்து

Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி

VALAMPURI

விலை ரூபா. 6.00

சங்கு 05 | வள்ளுவர் ஆண்டு 2034 | மார்கழி 10 | வியாழக்கிழமை | (25.12.2003) | தொலைபேசி - 2223378 | ஒலி 06

ராம்கோ சீமெந்து

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

ஆசியாக் கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது.

# அரசியல்வாதிகளின் நேர்மையீனம் மீண்டும் வெளிப்பட்டுள்ளது!

## நத்தார் செய்தியில் யாழ்.ஆயர்

(யாழ்ப்பாணம்)

**இலங்கையில் நீண்டு செல்லும் கொடிய யுத்தத்தை நிறுத்தி நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த ஜனாதிபதியும் பிரதமரும் முன்வர வேண்டும்.இவ்வாறு நத்தார் தினத்தையொட்டி யாழ்.ஆயர் மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை விடுத்த நத்தார் செய்தியில் தெரிவித்துள்ளார்.**

யாழ். ஆயர் விடுத்த நத்தார் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

2003ஆம் ஆண்டு கிறிஸ்து பிறப்பு விழா ஒரு புதிய சிக்கலான காலகட்டத்தில் நிகழ்கிறது. இலங்கை ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையில் இருந்து வந்த அரசியல் கருத்து வேறுபாட்டின் முறுகல் நிலையும் அதன் உச்சக்கட்டமான இன்றைய அரசியல் ஸ்திரமற்ற குழப்ப நிலையும் எதிர்பார்க்கப்பட்ட ஒன்றாயினும் தமிழ் மக்களை பொறுத்தவரையில் மிகவும் வேதனைக் குரியதாகும்.

தமிழ் மக்கள் வாழ்வில் எதோ ஒரு சரித்திர திருப்பம் ஏற்படப் போகிறது. நிரந்தர அமைதியும் சமாதானமும் சுதந்திரமும் நிறைந்த ஒரு வாழவு மிக நீண்ட கால போர் அனுபவங்களின் பின் மலரப்போகிறது என எண்ணி யிருந்த வேளை தமிழ் மக்களின் எதிர்பார்ப்புக்கள் அனைத்தும் சிதறடிக்கப்பட்டுளளது. இலங்கை சுதந்தரம் பெற்ற காலம் முதல் அரசியல் (02ம் பக்கம் பார்க்க)

## தமிழ்ச்செல்வனின் கருத்தை நிராகரித்து

# அமைச்சர் ரவூப் ஹக்கீம் தலைவர் பிரபாவுக்கு கடிதம்



(கொழும்பு)

கடந்த 2002ம் ஆண்டு ஏப்ரல் மாதம் விடுதலைப்புலிகளுக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசிற்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்ம் தற்போது செல்லுபடியாகாது என அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்திருந்த கருத்தை நிராகரித்து, முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அமைச்சர் ... னுக்கு கடிதம் அனுப்பியிருக் கிறார்.

மேலும் 2002ல் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தம் தமிழ் முஸ்லிம் சமூகங்களின் நலனுக் காகவே செய்யப்பட்டது. எனவே இது தற்போது செல்லுபடியாகுமென ஹக்கீம் வலியுறுத்தி இருக்கிறார்

கடந்த வெள்ளிக்கிழமை தமிழ்



**நத்தார் வாழ்த்துக்கள்**

அன்பர்கள், ஆதரவாளர்கள்,
வாசகப் பெருமக்கள்,
விளம்பரதாரர்கள்,
விற்பனையாளர்கள்
அனைவருக்கும் எமது
நத்தார் நல்வாழ்த்துக்களைத்
தெரிவித்துக் கொள்கின்றோம்

வலம்புரிக் குடும்பம்

சிதறடிக்கப்பட்டுள்ளது. இலங்கை சுதந்திரம் பெற்ற காலம் முதல் அரசியல் (12ம் பக்கம் பார்க்க)

# தலைவர் பிரபாவுக்கு கடிதம்



(கொழும்பு)

கடந்த 2002ம் ஆண்டு ஏப்ரல் மாதம் விடுதலைப்புலிகளுக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசிற்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்ம் தற்போது செல்லுபடியாகாது என அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்திருந்த கருத்தை நிராகரித்து, முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அமைச்சர் ரவூப்ஹக்கீம் தலைவர் பிரபாகரனுக்கு கடிதம் அனுப்பியிருக்கிறார்.

மேலும் 2002ல் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தம் தமிழ் முஸ்லிம் சமூகங்களின் நலனுக்காகவே செய்யப்பட்டது. எனவே இது தற்போது செல்லுபடியாகுமென ஹக்கீம் வலியுறுத்தி இருக்கிறார்

கடந்த வெள்ளிக்கிழமை தமிழ் (10ம் பக்கம் பார்க்க)



## நத்தார் வாழ்த்துக்கள்

அன்பர்கள், ஆதரவாளர்கள், வாசகப் பெருமக்கள், விளம்பரதாரர்கள், விற்பனையாளர்கள் அனைவருக்கும் எமது நத்தார் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்

வலம்புரிக் குடும்பம்

# தமிழர்களைக் கொன்றொழிக்கவே மிலேனியம் சிற்றிஅமைக்கப்பட்டது

### கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ணா அதிரடித் தகவல்

(கொழும்பு)

கொம்பனித்தெரு நிப்பொன் நட்சத்திர விடுதியில் நடைபெற்ற புதிய இடதுசாரி முன்னணியின் செய்தியாளர் மாநாட்டில், முன்னணியின் தேசிய அமைப்பாளர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ணா' தமிழரை கொன்று குவிப்பதற்கு அமைக்கப்பட்டதே மிலேனியம்சிற்றி' என்று தெரிவித்தார் .

இந்தச் செய்தியாளர் மாநாட்டில் முன்னணியின் செயலாளர் லீனஸ் ஜெயதிலக, தொழிற் சங்கத் தலைவர் நீல் விஜேசிங்க, அந்தரங்க காரியதரிசி ஜெராட் கமகே ஆகியோரும் கலந்து கொண்டனர்.

சர்ச்சைக்குரிய இந்த இல்லம் பாதுகாப்பு நோக்கத்துக்காக அமைக்கப்படவில்லை எனக் குறிப்பிட்ட அவர், தமிழர்களையும், இளைஞர்களையும் கொன்று குவிப்பதற்காக பொ.ஐ.முன்னணி ஆட்சியில் இருந்த காலத்தில் அமைக்கப்பட்ட சித்திரவதை முகாம் இது வெனவும் தெரிவித்தார். இதற்கு ஆதரவாக இடதுசாரி வேசம் போடும் ஜே.வி.பி. (10ம் பக்கம் பார்க்க)

# வடமேல் மாகாண சபைத் தேர்தல்

## சமாதானத்தை வலியுறுத்துவதற்கு மக்களுக்கு கிடைத்த நல்ல சந்தர்ப்பம்

### அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவிப்பு

(நமது நிருபர்)

2004-ம் ஆண்டு மார்ச் மாதம் நடைபெறவுள்ள வட மேல் மாகாண சபைக்கான தேர்தல், நாட்டின் சமாதான முயற்சிகளுக்கும் அரசியல் ஸ்திரத்தன்மைக்கும் ஆதரவினை வழங்குவதற்கு மக்களுக்கு கிடைக்கும் மற்றுமொரு சந்தர்ப்பமாக அமையும் இவ்வாறு அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

குருநாகலில் இடம் பெற்ற பொது வைபவம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் பேசுகையில்,

அடுத்த வருடம் பெப்ரவரி மாதம் வடமேல் மாகாண சபை தன்னிச்சையாகவே கலைந்துவிடும். ஜனாதிபதியோ பிரதமரோ இதற்கான தீர்மானத்தை எடுக்க வேண்டிய அவசியம் இல்லை.

எந்தவொரு விடயத்தையும் உருவாக்குவது என்பது கஷ்டமான காரியமாகும். பலத்த சிரமங்களின் மத்தியில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவினால் கட்டியெழுப்பிய அனைத்து நடவடிக்கைகளும் நவம்பர் மாதம் 4-ம் திகதியுடன ஒருகையொப்பத்துடன் அழித்தொழிக்கப்பட்டன. இதுதான் எமக்கு இன்று ஏற்பட்டுள்ள மோசமான சம்பவமாகும். இவற்றுக்கெல் (10ம் பக்கம் பார்க்க)

# இலங்கையில் தமிழர்கள் சமபலத்துடன் இருக்கிறார்கள்

### அமைச்சர் மகேஸ்வரன் சென்னையில் தெரிவிப்பு

(சென்னை)

இலங்கையில் தமிழர்கள் இன்று சம பலத்துடன் இருக்கிறார்கள். நாங்கள் பலமான நிலையிலேயே பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுக் கொண்டு இருக்கிறோம்.

இவ்வாறு இந்து கலாசார அமைச்சர் தி. மகேஸ்வரன் சென்னை விமான நிலையத்தில் இந்தியப் பத்திரிகையாளர்களுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

அனைத்துல மகாபாரத மகாநாட்டில் விசேட விருந்தினராக அழைக்கப்பட்டு தமிழ் நாட்டுக்குச் சென்றிருக்கும் அமைச்சர் மகேஸ்வரன் அங்கு விமான நிலையத்தில் பத்திரிகையாளர்களுக்கு அளித்த பேட்டியில் மேலும் தெரிவித்ததாவது.

இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலமே இறுதித்தீர்வைக் காணமுடியும். யுத்தத்தின் மூலம் ஒரு போதும் தீர்வைக் காணமுடியாது. நாம் சமாதானத்தையே விரும்புகின்றோம். இலங்கையில் எந்த அரசு ஆட்சிக்கு வந்தாலும் பேச்சு வார்த்தை மூலமே இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும் என்று கூறினார். (இ)

# முகமாலை சோதனை சாவடியை படையினர் 6.30 மணிக்கு மூடினர்

## நம்பி வந்த மக்கள் ஏமாற்றம்

(கிளிநொச்சி)

நத்தார், புதுவருட பண்டிகையை முன்னிட்டு ஓமந்தை, உயிலங்குளச் சோதனைச் சாவடிகள் ஊடாக இரவு 9.30 மணிவரை போக்குவரத்துக்கு பொதுமக்களை அனுமதித்த போதும், முகமாலைச் சோதனைச் சாவடி ஊடான போக்குவரத்தை இராணுவத்தினர் மாலை 6.30 மணியுடன் மூடியுள்ளனர்.

ஏ-9 வீதி முகமாலைச் சோதனைச் சாவடியூடாக விடுதலைப் புலிகள் இரவு 9.30 மணிவரை போக்குவரத்துக்காக பொதுமக்களை அனுமதிக்கத் தயாராக இருந்த போதும், இராணுவத்தினர் தமது சோதனைச் சாவடியை மாலை 6.30 மணியுடன் மூடியதால் பொதுமக்களது போக்குவரத்து தடுக்கப்பட்டதாக தெரியவருகிறது.

மின்சார வசதி ஏற்படுத்தப்படாத காரணத்தினாலேயே சோதனைச் சாவடி படைத்தரப்பால் மூடப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

(10ம் பக்கம் பார்க்க)

# சிவசக்தி சிவநேசனின் இசைக் கச்சேரி நாளை



(யாழ்ப்பாணம்)

இலண்டன் பாரதீய வித்தியாபவன் இசை வீணை விரிவுரையாளர் திருமதி சிவசக்தி ஆனந்தனின் இசை நிகழ்வு நாளை மாலை 5.30 மணிக்கு நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனத்தில் நடைபெறவுள்ளது.

இலண்டனில் இருந்து யாழ்ப்பாணம் வரும் இவர், மகா வித்துவான் வீரமணி ஐயரின் முதல் மாணவியாக நடன அரங்கேற்றம் கண்டவர். இதேவேளை இவரது இசைக்கச்சேரி வீரமணி ஐயருக்குச் சமர்ப்பணமாக இடம் பெறவுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (இ)

# அரசியல்வாதிகளின்...

வாதிகள் நீண்ட காலமாக நடத்திவந்த அரசியல் நேர்மையற்ற தன்மை மீண்டும் ஒருமுறை வெளிக்காட்டப்பட்டுள்ளது.

இலங்கையில் மீண்டும் ஒரு தடவை யுத்தம் மூளுமானால் அதன் தாக்கங்களையும் கோர விளைவுகளையும் அனுபவிக்கப் போகிறவர்கள் தமிழ் மக்களே என்ற வகையில் போரைப் பற்றி கனவில்கூட அவர்கள் நினைக்கத் தயாராய் இல்லை. இலங்கை மண்ணில் இனப் பிரச்சினைக்கான ஓர் அரசியல் தீர்வு ஏற்படுமானால் அது இலங்கையின் இரு முக்கிய அரசியல் கட்சிகளின் கூட்டு முயற்சியிலேயே ஏற்பட முடியும். இந்த இரு முக்கிய கட்சிகளின் தலைவர்களான ஜனாதிபதியும் பிரதமரும் பதவியில் இருக்கும் வேளை இவர்களின் மனதை இறைவன் பக்குவப்படுத்தவும் உரிய விதமாக திசை திருப்பி இலங்கை மண்ணில் நீண்ட கால இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண வழிவகுக்கவும் வேண்டித் தமிழ் மக்கள் அனைவரும் இந்த இக்கட்டான வேளையில் இறைவனில் முழு நம்பிக்கை [illegible]த்து செபத்தில் ஈடுபட வேண்டுமென மீண்டுமொரு தடவை அழைப்பு விடுக்கிறோம்.

இரண்டு தசாப்தங்களாகப் போரையும் அதன் அழிவுகளையும் அன்றாட அனுபவங்களாகக் கொண்டிருந்த தமிழ் மக்கள் எத்தனையோ அடிப்படை உரிமைகளையும் சுதந்திரத்தையும் இழந்தவர்கள். பயத்தோடும், பதற்றத்தோடும் பாதுகாப்பில்லா நிலையில் தம் வாழ்வை மிக நீண்ட காலம் கழித்தவர்கள்.

இனியும் இந்த நிலையைத் தொடரவிடாமல் இந்த இக்கட்டான வேளையில் யார் பெயரையும், பெருமையையும் பெற்றுக் கொள்வது என்ற அதிகாரப் போட்டியில் தமிழ் மக்களின் சுபீட்சமான எதிர்கால வாழ்வை நாசம் செய்ய வேண்டாமென்று இலங்கை வாழ் தமிழ் மக்கள் அனைவர் பெயராலும் ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் மனிதாபிமான ரீதியில் அன்பு வேண்டுகோள் விடுக்கிறோம்.

விடுதலைப் புலிகளின் தலைவர் தமது 2003ம் ஆண்டு மாவீரர் தின உரையில் சமாதானத்திற்கான தனது உறுதிப்பாட்டை உலகம் முழுவதும் அறியத்தக்க விதமாக மிக ஆணித்தரமாக வெளிப்படுத்தியிருப்பது மிகவும் வரவேற்கத்தக்கது. இந்த இக்கட்டான நிலையிலும் இச் செய்தியானது மன மகிழ்வையும் ஆறுதலையும் தருகிறது.

கடந்த கால போர் அனுபவங்களின் பின்னர் ஏனோதானோ என்ற ஒரு கட்டுப்பாடற்ற வாழ்வை வாழ எத்தனிக்கின்ற இளைய சமுதாயத்தினர் தம் நிலையையும் போக்கையும் தமிழ் மக்களின் எதிர்கால வாழ்வை கவனத்தில் கொண்டு தம் இளைய சக்திகளை உரிய விதமாக வழிப்படுத்த வேண்டுமென வேண்டிக் கொள்ள விரும்புகின்றோம். இளமைத் துடிப்பில் சுதந்திரமாக எதையும் செய்யலாம் என்ற நிலைப்பில் இன்று இளைஞர்கள் செய்து வருகின்ற நடவடிக்கைகள் போர்க் காலக் குழந்தைகளின் உளவியல் தாக்கத்தையும் வெளிப்பாட்டையும் பிரதிபலிப்பதாய் இருந்தாலும் அது ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல.


எதிர்காலத் தலைவர்களான இவர்கள் கவனத்தோடும் கண்ணியத்தோடும் வாழ்வை அணுக வேண்டும். பொது நலனுக்காகத் தம்மை அர்ப்பணிக்க வேண்டும்.

போரின் பன்முகத் தாக்கங்களினால் எமது சமூகக் கட்டுமான அமைப்பில் குடும்பங்கள் மிக மோசமாகத் தாக்கப்பட்டுள்ளன. குடும்ப பாரம்பரி[illegible] [illegible]ற்றுமை, திருமண பந்தம், [illegible]ிள்ளைவளர்ப்பு, பெரியோரைக் கனம் பண்ணுதல், கீழ்ப்படிதல் போன்ற பல விடயங்கள் இன்று குழப்பத்திற்கும் கேள்விக்குமுள்ளாகியிருக்கின்றன. யாழ்.மறைமாவட்டத்தில் மலர இருக்கின்ற புதிய ஆண்டில் குடும்பங்களில் அதிக கவனம் செலுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. எல்லாத் தமிழ்க் குடும்பங்களிலும் விசேட கவனம் செலுத்த வேண்டிய ஒரு கால கட்டத்தில் நாம் இருக்கின்றோம். குடும்ப அமைப்பையும் கட்டுக்கோப்பையும் நாம் மீள ஒருதடவை கவனமுடன் பாதுகாத்து வளர்ப்போமானால் இன்று நாம் எதிர்நோக்குகின்ற இளைஞர்களுடைய பிரச்சினை போன்ற பல பிரச்சினைகள் தானாகவே இல்லாது ஒழிந்து விடும்.

இருளில் நடந்துவந்த மக்கள் பேரழிவைக் கண்டனர் என்ற இறைவாக்கினர் எசாயாவின் வார்த்தைகளைத் திரும்பத்திரும்பப் படித்தும் செபித்தும் வேண்டிக் கொண்ட எமக்குக் கிடைத்த சிறு ஒளியாகிய இந்த சமாதான முன் முயற்சிகள் பெரு வெளிச்சமாக மாறி இலங்கைவாழ் தமிழ் மக்கள் அனைவர் மேலும் வீச வேண்டுமென்பதே எமது வேண்டுதலும் ஆசியுமாகும்.

உலகின் ஒளியாகப் பிறந்த பாலகன் யேசு எமது இல்லங்களிற்கும் உள்ளங்களுக்கும் நீடித்த ஒளியையும் நிரந்தர சமாதானத்தையும் கொண்டுவர நத்தார் வாழ்த்துக்களை தெரிவித்து நிற்கின்றோம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந)

## அதிகார வலைக்குள் சிக்கியுள்ள சமாதானப் புறா




# நியமனம் வழங்க நடவடிக்கை

(கொழும்பு)

வடக்குக் கிழக்கு மாகாண சபையின் கீழ் உள்ள வைத்திய சாலைகளில் சுகாதாரத் தொண்டர்களாகக் கடமை புரியும் சிற்றூழியர்களுக்கு நிரந்தர [illegible]மனம் வழங்க நடவடிக்கை [illegible]கப்பட்டுள்ளது.

நீண்ட காலமாக சுகாதாரத் தொண்டர்களாகப் பணி புரிந்து வரும் சிற்றூழியர்களுக்கு இந் நியமனம் வழங்கப்படவுள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் எஸ் குமாரவேற்பிள்ளை தெரிவித்துள்ளார். தி-61,10

## வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம,உடுவில,ஏழாலை உப அலுவலகங்கள் நடுக்கட்டல் உத்தியோகத்தர் பதவிக்கான வெற்றிடங்கள்

மேற்படி பதவிக்கான விண்ணப்பங்கள் எதிர்வரும் 2004-01-05ஆம் திகதி திங்கட்கிழமை மு.ப.10.00 மணிவரை என்னால் ஏற்றுக் கொள்ளப்படும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டுள்ளவர்கள் இவ் அலுவலகத்தில் அதற்குரிய படிவங்களைப் பெற்றுத் தங்கள் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கலாம்.

1. இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.
2. இப் பதவிக்கு விண்ணப்பிப்போர் மொழி, கணிதம் ஆகிய பாடங்கள் உட்பட இரு தடவைக்கு மேற்படாத அமர்வுகளில் க.பொ.த(ச/த)பரீட்சையில் 6 பாடங்களில் சித்தியெய்தி இருத்தல் வேண்டும்.
3. வயது 18க்குக் குறையாமலும் 45க்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.
4. வலிகாமம் தெற்கு பிரதேச சபை எல்லைக்குள் வசிப்பவராக இருத்தல் வேண்டும்.
5. நல்ல ஆரோக்கியமும் நன்னடத்தையும் உடையவராக இருத்தல் வேண்டும்.
6. நடுக்கட்டல் உத்தியோகத்தருக்கு அவரால் சேகரிக்கப்படும் பணத்தில் 20% தரகுப் பணமாக வழங்கப்படும்.
7. இவர்கள் சபையில் தற்காலிக/நிரந்தர நியமனங்கள் கோர முடியாது.
8. இப்பதவிக்கு நியமனம் செய்யப்படும் பட்சத்தில் ரூ.3000/- ரொக்கப் பிணையாகச் செலுத்துதல் வேண்டும்.

மேற்படி பதவிக்கான விண்ணப்பங்கள் யாவும் பதிவுத் தபால் மூலம் செயலாளர், வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம் என்னும் முகவரிக்கு மேற்குறித்த திகதியிலோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**திருமதி ச.சொக்கலிங்கம்**
செயலாளர்.
வலிகாமம் தெற்கு பிரதேச சபை,சுன்னாகம்

வலி.தெற்கு பிரதேச சபை.சுன்னாகம்
2003-12-18
[C/7060]

## வலிகாமம் தெற்கு பிரதேச சபை,சுன்னாகம் படவரைஞர்களைப் பதிவு செய்தல் - 2004

### தேவையான தகைமைகளும் நிபந்தனைகளும்

1. அங்கீகரிக்கப்பட்ட படவரைஞர் பயிற்சி நெறி அல்லது தேசிய தொழில் நுட்பவியல் சான்றிதழ்(குடியியல்), அல்லது தேசிய தொழில் நுட்பவியல் சான்றிதழ்(கணிய அளவையியல்) அல்லது அங்கீகரிக்கப்பட்ட தொழில் நுட்பக் கல்லூரியில் இதற்குச் சமனான சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.
2. சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களுடன் தொழில் நுட்பச் சான்றிதழ்களின் போட்டோப் பிரதிகளையும் இணைத்து விண்ணப்பித்தல் வேணடும்.
3. தேர்ந்தெடுக்கப்படும் படவரைஞர்கள் பதிவுக் கட்டணமாக ரூ.500/- செலுத்துதல் வேண்டும்.
4. பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் 15-01-2004ம் திகதிக்கு முன் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

**திருமதி ச.சொக்கலிங்கம்**
செயலாளர்,
வலிகாமம் தெற்கு பிரதேச சபை,
சுன்னாகம்

வலி.தெற்கு பிரதேச சபை,
சுன்னாகம்
2003-12-22
[C/7062]

## வலிகாமம் தெற்கு பிரதேச சபை சுன்னாகம்/உடுவில்/ஏழாலை உப அலுவலகங்கள் ஆதனவரி அறிவித்தல்கள் - 2004

1987ஆம் ஆண்டின் பிரதேச சபைகள் கட்டளைச் சட்டம் இல.15 இன் பிரகாரம் அதற்கு உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் சார்பாக, ஆதன வரி அறவீடு சென்ற வருடம் அறவிட்ட விகிதத்தின் பிரகாரம் 2004ஆம் ஆண்டும் அறவீடு செய்யப்படவேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

2004ஆம் ஆண்டிற்கான ஆதன வரியை 2004-01-31ம் திகதிக்கு முன்னர் முழுமையாகச் செலுத்துபவர்களுக்கு இவ்வருடத்திற்கான மொத்த வரியில் 10% கழிவு வழங்கப்படும். ஒவ்வொரு கந்தாயத்திற்குமுரிய வரியை அந்தக் கந்தாயத்தின் முதல் மாத இறுதிக்குள் செலுத்துபவர்களுக்கு அக் கந்தாயத்திற்கான வரியின் 5% கழிவு வழங்கப்படும்.

குறிப்பிட்ட திகதிக்குள் ஆதனவரியைச் செலுத்தத் தவறின், வசிப்பிடங்களுக்கும், வெற்றுக் காணிகளுக்கும் 15%மும் ஏனைய ஆதனங்களுக்கு 20% மும் விறாந்துக் கட்டணமாக ஆதனவரியுடன் சேர்த்துச் செலுத்தப்படல் வேண்டும்.

ஆதலினால் வரியிறுப்பாளர்கள் தங்கள் ஆதனங்களுக்கான வரியை 2004-01-31ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிக்கு முன்பதாக அந்தந்த அலுவலகங்களில் முழுவதுமாகச் செலுத்தி சபையுடன் ஒத்துழைக்குமாறு வரியிறுப்பாளர்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

**திருமதி ச.சொக்கலிங்கம்**
செயலாளர்,
வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்

வலி.தெற்கு பிரதேச சபை,சுன்னாகம்
2003-12-18
[C/7061]

# வாக்கு மோசடிகள் செய்வதற்கு வாய்ப்பாகவே

# அரசாங்க ஊழியர்கள் அவசரமாக இடமாற்றம்

# அரசியல் அவதானிகள் குற்றச்சாட்டு

(கொழும்பு)

மாகாணசபைத் தேர்தல்கள் விரைவில் நடாத்தப்படவுள்ள நிலையில், பொலிஸ் அதிகாரிகள மற்றும் அரச அதிகாரிகள் பலர் அவசர அவசரமாக இடமாற்றம் செய்யப்பட்டு வருவது குறித்து மக்கள் மத்தியில் பலத்த சந்தேகங்கள் எழுந்துள்ளதாக அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

தேர்தலில் வாக்கு மோசடிகள செய்வதற்கு வாய்ப்பாகவே இந்த இடமாற்றங்கள் அவசர அவசரமாக மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர்கள் குற்றம்சாட்டி யுளளனர்.

இது தொடர்பாக தேர்தல் திணைக்கள நிறைவேற்று இயக்குநர் கிங்ஸ்லி றொட்றிகோ விரிவான அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில், அடுத்த வருடம் பெப்ரவரி மாதத்தில் வடமேல் மாகாணசபைத் தேர்தல் இடம்பெறவுள்ளது. தொடர்ந்து வடமத்திய மாகாணம், மத்திய மாகாணம் ஊவா மாகாணம், சப்பிரகமுவா மாகாண சபைகளுக கான தேர்தல்கள் ஏப்ரல் மாதத் திலும் தென்மாகாண சபைத் தேர்தல் செப்ரம்பர் மாதத்திலும் நடைபெறவுள்ளன.

இந்த நிலையில், தற்போது பொலிஸ்துறை அதிகாரிகளும். அரசாங்க உத்தியோகத்தர்களும் அவசர அவசரமாக இடமாற்றம் செய்யப்படுவது, அதிகாரத்தில் இருப்போர் தமக்கு சாதகமான செயற்பாடுகளை மேற்கொள்ளுவதற்கான வசதியை ஏற்படுத்துவதற்காகவே என எண்ணவேண்டியுள்ளது.

கடந்த காலங்களிலும் இவ்வாறு அரச அதிகாரிகள் மற்றும் பொலிஸ் அதிகாரிகள் பலர் தேர்தல் காலத்தில் இடமாற்றம் செய்யப்பட்டதனால் அந்த இடங்களில் பதவியில் இருந்த ஆட்சியாளர்கள் தமது எண்ணப்படி செயற்பட்டனர்.

இதனால் அங்கு வன்முறைகளும் சட்டவிரோத நடவடிக்கைகளும் தாராளமான முறையில் இடம்பெற்றன.

இவ்வாறான செயற்பாடுகளுக்கு பல்வேறு பொது அமைப்புக்கள் எதிர்ப்புத் தெரிவித்தன. அத்து டன் சுதந்திர தேர்தல் ஆணைக் குழு ஒன்று அமைக்கப்பட்டு தேர் தல் முறையில் மாற்றம் கொண்டு வரப்படவேண்டும் என வலியுறுத்தின. ஆனால் இதுவரை எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

எனவே இவ்வாறான இடமாற்றங்களைச் செய்து, வன்முறைகளுக்கும் தேர்தல் மோசடிகளுக்கும் இடமளிக்க வேண்டாமென சம்பந்தப்பட்டவர்களிடம் கோருவதுடன் சுதந்திரமாக தேர்தல் கள் நடக்க வழிகோலுமாறும் திணைக்கள நிறைவேற்று இயக்குநர் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(தி-63,10)

# மிதிவெடி அகற்றும் பணியை துரிதப்படுத்தக் கோரிக்கை

(திருநெல்வேலி)

வடமராட்சி கிழக்குப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டுவரும் மிதிவெடிகள் அகற்றும் பணிகளைத் துரிதப்படுத்துமாறு கோரி, வடமராட்சி கிழக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு நிறுவனம் யாழ்.அரச அதிபர் செ.பத்மநாதனிடம் கடந்த திங்களன்று கடிதம் ஒன்றைக் கையளித்துள்ளது.

வடமராட்சி கிழக்குப் பகுதியில் தாளையடி, வத்திராயன், வெற்றிலைக்கேணி, மண்டலாய் மற்றும் முள்ளியான்; நித்தியாவட்டை ஆகிய இடங்களில் மிதிவெடிகள் புதைக்கப்பட்டுள்ளமை இனம் காணப்பட்டு, அப்பகுதிகள் சிலவற்றில தற்போது மிதிவெடிகள் அகற்றும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

இருந்த போதிலும் அப்பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டுவரும் மிதிவெடி அகற்றும் பணிகளில் தாமதம் ஏற்பட்டுவருவதால், அப்பணிகளைத் துரிதப்படுத்துவதற்கு வேண்டிய உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

அத்துடன் மண் அணைகளை அமைப்பதற்கு இராணுவத்தினர் தாளையடி, வத்திராயன், கட்டைக்காடு ஆகிய பகுதிகளில் மண் அகழ்ந்து வருவதால் அப்பகுதிகளில் மக்கள் வாழ்வதற்கு அவை பெரும் இடைஞ்சலாக இருந்து வருகின்றன.

எனவே இச் சிரமங்களையும் இடைஞ்சல்களையும் நீக்குவதற்கு விரைவில் உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என வடமராட்சி கிழககு புனர்வாழ்வு, புனரமைப்பு நிறுவனம் அரச அதிபரிடம் கையளித்துள்ள அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(தி-43)

## 125 வீட்டுத் திட்டம்

(திருநெல்வேலி))

நிக்கொட் நிறுவனத்தின் அனுசரணையுடன், தமிழர் புனர்வாழ்வுக்கழகம் கட்டைக்காடு மற்றும் வெற்றிலைக்கேணி ஆகிய பகுதிகளில் 125 வீட்டுத் திட்டம் ஒன்றை அமைத்து வருகிறது

ஒவ்வொன்றும் சுமார் 75ஆயிரம ரூபா நிதி செலவில் அமைக்கப்பட்டு வரும் இவ் வீட்டுத்திட்டம் யாவும் எதிர்வரும் ஏப்ரல் மாதமள வில் பூர்த்தியடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அத்துடன், தற்போது பெய்து வரும் மழை காரணமாக மேற்படி வீட்டு வேலைத்திட்டத்திற்கு தேவையான கட்டடப் பொருட்களை உரிய நேரத்தில் அங்கு எடுத்துச் செல்வ தல் பெரும் சிரமம் எதிர்நோககப் படுவதால இதில் தாமதம் ஏற்பட்டு வருவதாகவும் தமிழர் புனர்வாழ் வுக்கழகம் தெரிவித்துள்ளது.

(தி-43)

## மக்கள் சிரமம்

(மருதங்கேணி)

முள்ளிகுளம் கிராமத்தில் மீள் குடியமாந்துள்ள 125குடும்பங்களுக்கான அடிப்படை வசதிகளோ, தொழில் வசதிகளோ செய்து கொடுககப்படவில்லை.

அத்துடன் அப்பிரதேச மக்கள் பயணம் செய்வதற்கான போக்குவரத்து வசதிகளும் சுகாதாரக் கல்வி போன்ற அடிப்படை வசதிகளும் செய்துகொடுக்கப்படவில்லை.

இதனால் இப் பகுதியில் மீளக் குடியமர்ந்த மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். இவ்விடயம் சம்பந்தமாக அரச அதிபருக்கு தமது தேவைகளைப் பூர்த்தி செய்து தருமாறு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

(தி-35)

# பாக்.நியூசிலாந்து டெஸ்ட் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவு

பாகிஸ்தான் அணிக்கும் நியூசிலாந்து அணிக்குமிடையில் நடைபெற்றுவந்த முதலாவது டெஸ்ட் போட்டி வெற்றி தோல்வி யின்றி நிறைவடைந்துள்ளது. நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டியின் கடைசிநாள் அன்று தேநீர் இடைவேளைக்குப் பின்னர் போதிய வெளிச்சமின்மை காரணமாக இப் போட்டி முடிவிற்குக் கொண்டுவரப்பட்டது.

ஆட்டம் முடிவிற்கு கொண்டு வரப்படும் போது நியூசிலாந்து அணி அதன இரண்டாவது இன்னிங்ஸிற்காக 8 விக்கெற்றுக் களை இழந்து 96 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில் பாகிஸ் தான் அணிசார்பில் முகமட் சமி துல்லியமாகப் பந்துவீசி 44 ஓட்டங்களுக்கு 5 விக்கெற்றுக்க ளைக் கைப்பற்றினார். துடுப்பாட் டத்தில் நியூசிலாந்து அணி சார் பில் ஜேக்கப்ஓரம் ஆட்டமிழக் காது 23 ஓட்டங்களைப் பெற் றுக் கொடுத்திருந்தார்.

இப் போட்டியின் முதல் இண்னிங் ஸிற்காக சகல விக்கெறறையும் இழந்து நியூசிலாந்து அணி 563 ஓட்டங்களைப் பெற்றிருந்தது இங்கு குறிப்பிடத்தக்கது. இதில் அணித்தலைவர் ஸ்ரீபன்.பிள மிங் 192 ஓட்டங்களையும், டானியல் விட்டோரி ஆட்டமிழக்காமல் 137 ஓட்டங்களையும், அணிக் காகப் பெற்றுக்கொடுத்தார். பந்து வீச்சில் ஸகீர் அகமட் 117 ஓட்டங் களை விட்டுக் கொடுத்து 5 விக் கெற்றுக்களை முதலாவது இன் னிங்ஸிற்காக கைப்பற்றினார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி முதல் இன் னிங்ஸில் சகல விக்கெற்றையும் இழந்து 463 ஓட்டங்களைப் பெற் றது. இதில் அணிக்காக மீள அழைக்கப்பட்டிருந்த மொயின் ஹாண் சிறப்பாகத் துடுப்பெடுத் தாடி 132 ஓட்டங்களையும் யசீர் கமீட் 80 ஓட்டங்களையும் பெற் றுக்கொடுத்தனர். பந்துவீச்சில் நியூசிலாந்து அணிசார்பில் ரெடன ரொபி 87 ஓட்டங்களை விட்டுக் கொடுத்து 5 விக்கெற்றுக்களைக் கைப்பற்றினார்.

இம் முதலாவது டெஸ்ட் போட்டியில் இறுதிநாள் ஆட்டம் மட்டுமன்றி 3வது மற்றும் 4வது நாள் ஆட்ட நேரத்திலும் சீரற்ற காலநிலை மற்றும் போதிய வெளிச்சமின்மை காரணமாக ஆட் டம் தடைப்பட்டது. இதனால் இப் போட்டி முடிவு பாதிப்படைந்துள் ளதுடன் 2அணி ரசிகர்களுக்கும் பலத்த ஏமாற்றமாக அமைந் தது. (தி-68)

# கஸ்ரா போட்டித் தொடரில் இலங்கை அணி வெற்றிவாகை

இந்தியாவில் நடைபெற்று வருகின்ற 3நாடுகளின் 'ஏ' அணிகள் பங்குபற்றும் கஸ்ரா ஒரு நாள் போட்டித் தொடரில், நேற்று முன்தினம நடைபெற்ற போட்டியில் பாகிஸ்தான் 'ஏ' அணியை இலங்கை 'ஏ'அணி 5 விக்கெற்றுக்கள் வித்தியாசத்தில் வெற்றி கொண்டுள்ளது.

கல்கத்தாவின் ஈடன்ஹாடன் மைதானத்தில் நடைபெற்ற இந் தப் போட்டியின் நாணயச் சுழற் சியில் வெற்றிபெற்ற பாகிஸ் தான் 'ஏ' அணி, முதலில் துடுப் பெடுத்தாடி சகல விக்கெற்றுக் களையும் இழந்து 300 ஓட்டங் களைப் பெற்றது.

இதில் பாகிஸ்தான் அதிரடித் துடுப்பாட்ட வீரர் சைட்அப்றிடி 63 ஓட்டங்களையும், பைஸ் அக் பால் 50 ஓட்டங்களையும், விலாஸ அஸ்சாட் 52 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் வஸ்சித குணசேகர ஹேரத் ஆகியோர் தலா 2 விக்கெற்றுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இலங்கை 'ஏ' அணி49:1 ஓவா முடிவில் 5 விக்கெற்றுக்களை மட்டுமே இழந்து, 304ஓட்டங் களைப் பெற்று வெற்றியைத் தனதாக்கிக்கொண்டது.

இதில் ரசன் ஆல்னோட் ஆட் டமிழக்காமல் 100 ஓட்டங்களைப பெற்றுக்கொடுத்தார். பந்துவீச் சில் சைட் அப்றிடி, முகமட் ஹாபீஸ் ஆகியோர் தலா 2 விக்கெற்றுக் களைக் கைப்பற்றினர்.

இப் போட்டியின் ஆட்ட நாயகனாக இலங்கை அணியின் ரசன் ஆல்னோட் தெரிவுசெய்யப்பட் டார்.

இந்திய 'ஏ' அணியுடனான போட்டியிலும் இலங்கை 'ஏ' அணி வெற்றிபெற்று இவ் ஒரு நாள் தொடரில் முன்னணியில் திகழ்கின்றமை இங்கு குறிப்பிடத தக்கதாகும். (தி-68)

# விளையாட்டுச் செய்திகள்

## உதைபந்தாட்ட போட்டி

(திருநெல்வேலி)

தமிழீழ விடுதலைப்புலிகளின் முக்கிய தளபதி கேணல் கிட்டு உட்பட அவருடன் வீரகாவியமாகிய பத்து வேங்கைகளின் 10ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன் னிட்டு தமிழீழ விளையாட்டுத் துறையினரால் மாபெரும் உதை பந்தாட்டப் போட்டிகள் நடாத்தப்பட வுள்ளன.

எதிர்வரும் ஜனவரி மாதம் 10 ஆம் திகதி கிளிநொச்சி மத்திய விளையாட்டு அரங்கில் நடைபெறவுள்ள இப்போட்டிகளில் தமிழீழத்தின் யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மட்டக்களப்பு, திருகோணமலை, மற் றும் அம்பாறை, வவுனியா ஆகிய 8மாவட்டங்களிலிருந்தும் வீரர்கள் கலந்து கொள்ளவுள்ளனா.(தி-43)

## மாவீரர் வெற்றிக்கிண்ண உதைபந்தாட்ட தொடரை சந்திரோதயா அணி வென்றது

(மருதங்கேணி)

மாவீரர் வெற்றிக் கிண்ணத் திற்காக கிளிநொச்சி மத்திய விளையாட்டரங்கில் நடைபெற்று வரும் உதைபந்தாட்டப் போட் டித் தொடரில் கடந்த திங்களன்று நடைபெற்று முடிந்த போட்டிகளில உருத்திரபுரம் சந்திரோதயா அணி வெற்றிக்கிண்ணத்தை சுவீகரித் துக் கொண்டது.

உருத்திரபுரம் உழவர் ஒன்றிய அணியை எதிர்த்து விளையாடிய உருத்திரபுரம் சந்திரோதயா அணி சிறப்பாக ஆடி 2:1 என்ற கோல் வித்தியாசத்தில் வெற்றியீட்டி யது.

ஆட்டத்தின் தொடக்கத்தில் உருத்திரபுரம் உழவர் ஒன்றிய அணி ஒரு கோலைப் போட்டு முன்னிலையில் திகழ்ந்த போதிலும் ஆட்டத்தின் பிற்பகுதியில் உருத்திரபுரம் சந்திரோதயா அணி இரு கோல்களைப் போட்டு முன் னிலைக்கு வந்துள்ளது.

மேற்படி போட்டியின் இறுதி யில் இடம்பெற்ற பரிசளிப்பு நிகழ் வில் முதலாம் இடத்தைப் பெற்ற உருத்திரபுரம் சந்திரோதயா அணிக்கு இளந்தென்றல் வாணிபப் பணிப்பாளர் எஸ். சேரனும் 2ஆம் இடத்தைப் பெற்ற உருத் திரபுரம் உழவர் அணிக்கு தமிழீழ விளையாட்டுத் துறைப்பொறுப் பாளர் எஸ். பாப்பாவும் பணப்பரி சில்களையும் வெற்றிக்கிண்ணங் களையும் வழங்கிக் கௌரவித் தனர்.

(தி-35)



ஐரோப்பியாவின் சிறந்த கால்பந்து வீரராகச் செக் குடியரசைச் சேர்ந்த பவேல் நெட்வேட் தேர்ந்தெடுக் கப்பட்டுள்ளார். இதையொட்டி பரிசாக அளிக் கப்பட்ட தங்கப் பந்திற்கு முத்தம் கொடுத்து மகிழும் அவர்.

# யாழ். மக்களின் பிரச்சினைக்கு தீர்வு காண

# படையினரும் உதவவேண்டிய தருணம் இது

## யாழ். மாவட்ட இராணுவத் தளபதி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

**யாழ்ப்பாணக் குடாநாட்டில் வாழ்கின்ற பொதுமக்கள் எதிர்நோக்குகின்ற வாழ்வியல் ரீதியான பிரச்சினைகளைத் தீர்ப்பதில் பாதுகாப்புப் படையும் அரச அதிகாரிகளும் இணைந்து செயற்படவேண்டிய தருணம் ஏற்பட்டுள்ளது என யாழ். மாவட்ட இராணுவத் தளபதியான மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபால நேற்றைய தினம் யாழ்ப்பாண மாவட்ட அரச செயலகத்தில் கூடியிருந்த அரச திணைக்களத் தலைவர்கள் மத்தியில் உரையாற்றும் போது தெரிவித்தார்.**

யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் செ. பத்மநாதன் தலைமையில் இடம்பெற்ற இச் சந்திப்பின் போது யாழ். மாவட்டத்தில் இயங்கி வருகின்ற திணைக்களங்களின் தலைவர்கள், பிரதேச செயலர்கள், மேலதிக அரச அதிபர், திடடப்பணிப்பாளர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

சுமார் இரண்டரை மணித்தியாலமாக இடம்பெற்ற இச்சந்திப்பின் போது , யாழ். மாவட்டத்தில் வாழ்கின்ற பொதுமக்கள் எதிர்நோக்குகின்ற மிக முக்கிய பிரச்சினைகள் பற்றி இராணுவத்தளபதி, திணைக்களத் தலைவர்கள் மற்றும் பிரதேச செயலர்களுடன் கலந்துரையாடினார்.

மேலும் இச் சந்திப்புத் தொடர்பாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் செ. பத்மநாதன் இராணுவத் தளபதி சுசில் சந்திரபால முன்னிலையில் தெரிவிக்கும்போது,

எமது மாவட்டத்தில் இருக்கின்ற மக்களின் பிரச்சினைகளை இராணுவத் தரப்பினரும் அரச அதிகாரிகளும் இணைந்து மனம்விட்டுப் பேசி, பிரச்சினைகளின் ஆழத்தினை உணர்ந்து கலந்துரையாடி புரிந்துணர்வு அடிப்படையில் செயலாற்ற வேண்டும். அரச அதிகாரிகளுக்கும் படைத்தரப்பினருக்கும் சட்ட ரீதியானதும், நிர்வாக ரீதியிலானதுமான செயற்பாடுகள் இருக்கின்றன. அவற்றினை புரிந்துணர்வு நோக்கில் அணுகி ஆராய்ந்து தீர்க்க முனைய வேண்டும்.

மேலும், பிரதேச செயலகப் பிரதேசங்களில் பாதுகாப்புப்படையினருடன் ஏதேனும் பிரச்சினைகள் அல்லது முரண்பாடுகள் தோன்றும் பட்சத்தில், அவைபற்றி அரச அதிகாரிகள் அவ்வப் பிரதேச படைப் பொறுப்பதிகாரிகளுடன் இணக்கப்பட்ட நிலையில் கலந்துரையாடிப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டும். அத்தகைய நிலைப்பாட்டினை நான் பெரிதும் விரும்புகின்றேன் என இராணுவத் தளபதி குறிப்பிட்டார் என அரசாங்க அதிபர் தெரிவித்தா.

இதேவேளை, நேற்று முன்தினம் யாழ். அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையப் பிரதிநிதிகளுடனான சந்திப்பின் போது,

யாழ்.குடாநாட்டில் உள்ள 5 இலட்சம் மக்களையும் 50 ஆயிரம் படைகளையும் பாதுகாக்கவேண்டிய பாரிய பொறுப்பும் கடமையும் எனக்கு உண்டு.

யாழ்.குடாநாட்டு மக்களிடையே இயல்பு வாழ்க்கையை ஏற்படுத்த என்னாலான அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்பேன்.

படைத்தரப்பினர் ஏதேனும் பிரச்சினைகள் மற்றும் அநீதிகளை மக்களுக்கு ஏற்படுத்தினால், அது குறித்து பொதுமக்கள் எனக்குத் தெரிவிக்கும் பட்சத்தில் தகுந்த நடவடிக்கை எடுப்பேன.

பாடசாலை மாணவர்கள் மத்தியில் எந்தவொரு அரசியல் கட்சியும் அரசியலைக் கொண்டு செல்லக் கூடாது. மாணவர்கள் தமது கல்வித் துறைகளில் எப்போதும் அக்கறையுடன் செயற்பட வேண்டும்.

குடாநாட்டிலுள்ள உயர் பாதுகாப்பு வலயத்தில் மக்கள் மீளக் குடியமரவென படையினர் 600மீற்றர் பிரதேசத்தை விடுவித்துள்ள போதிலும், மக்கள் எவரும் அப்பிரதேசத்தில் மீளக்குடியேற முன்வரவில்லை.

இதுவிடயம் குறித்து உரியவர்கள், பிரதேச செயலாளர்கள், கிராம உத்தியோகத்தர்கள் ஆகியோருடன் தொடர்பு கொண்டு அவர்களை மீளக் குடியேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார். இதேவேளை, முகமாலைப் பாதையின் ஊடாக பயணிகள் பயணம் செய்வதற்கான நேரத்தை அதிகரிக்க முடியுமா? எனக் கேட்கப்பட்ட கேள்விக்கு அது குறித்து இப்போது எதுவும் என்னால் கூறமுடியாது என்றார்.

(தி-16,43)

# விடுதலைப் போராட்ட கால கட்டத்தில்

# உயிர்கொல்லி எயிட்ஸ் ஓர் பேராயுதம்

## தமிழீழ அரசியல் துறை துணைப்பொறுப்பாளர் கருத்து

(யாழ்ப்பாணம்)

இன விடுதலைப் போராட்டம் இடம்பெற்று வரும்வேளையில், எமது மண்ணில் எயிட்ஸ் நோயினால் பொதுமக்கள் பாதிக்கப் பட்டு வருவது குறித்து தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரன் முதல் தளபதிகள், போராளிகள் வரை ஆழ்ந்த வேதனையும் பெரும் துயரமும் அடைந்துள்ளனர். இந்நிலையில், எயிட்ஸ் நோய் ஏமது பிரதேசத்தில் பரவுவதைத் தடுத்து நிறுத்த வேண்டிய பாரிய பொறுப்பும் கடமையும் ஒவ்வொருவருக்கும் இருக்கவேண்டியது மிகவும் அவசியம் என தமிழீழ அரசியல் துறைத் துணைப்பொறுப்பாளர் சோ.தங்கன் தெரிவித்துள்ளார்.

எயிட்ஸ் விழிப்புணர்வு பிரசார நடவடிக்கை தொடர்பாக நேற்றைய தினம் யாழ். மாவட்ட அரசியல் துறை அலுவலகத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இப் பத்திரிகையாளர் மாநாட்டில், யாழ். மாவட்ட அரசியல் துறைத் துணைப் பொறுப்பாளர் செம்மணன், தமிழீழ சுகாதார சேவைப் பொறுப்பாளர் அருண் மாஸ்ரர், தேசிய எழுச்சிப்பேரவையைச் சேர்ந்த கனகலிங்கம் ஆகியோர் உட்பட் மற்றும் பலரும் கலந்து கொண்டனர்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

கொடிய உயிர்கொல்லி நோயான எயிட்ஸில் இருந்து தம்மையும் தமது சமூகத்தையும் பாதுகாக்க வேண்டிய பாரிய பொறுப்பு ஒவ்வொருவருக்கும் உண்டு. இந்த வகையில், தமிழீழ சுகாதாரப் பகுதியினரும் நாமும் இணைந்து யாழ். மாவட்டத்தில் எயிட்ஸ் விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம்.

எமது பிரதேசத்தில் எயிட்ஸ் நோயை இல்லாமல் செய்வதன் மூலம் நாம் எமது எதிர்காலச் சந்ததியினரைக் காப்பாற்றிக் கொள்ள முடியும். அரசிற்கும் எமக்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதன் பின்னர் நிலவிய சுமுகமான சூழ்நிலையை அடுத்து, யாழ்.மாவட்டத்திற்கு வெளிநாட்டவர்கள் வந்து போகின்றனர். இதன் மூலமே யாழ்.குடாநாட்டில் எயிட்ஸ் நோய் மிகத் தீவிரமாக பரவியுள்ளது. இது குறித்து எமது தலைவர் மிகவும் வேதனையடைந்துள்ளார்.

எனவே, இந்நிலைமைகளை மாற்றுவதற்காக யாழ்.குடாநாடு தழுவிய ரீதியில் எதிர்வரும் 29 ஆம் திகதிவரையான ஒரு வார காலப்பகுதிக்கு எயிட்ஸ் விழிப்புணர்வு பிரசார நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளோம். இந்த வகையில், யாழ்.மாவட்டத்தை 5 கோட்டங்களாகப் பிரித்து அப் பகுதிகளில் பகுதிபகுதியாக விழிப்புணர்வுப் பிரசாரங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இந்த வகையில் வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம், நல்லூர், தீவகம் ஆகிய கோட்டங்களில் முன்னெடுக்கப்படும் பிரசார நடவடிக்கைகளுக்கு முறையே, தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டுப் பொறுப்பாளர் மதன்ராஜ், ஊடகத்துறை வளர்ச்சிப் பொறுப்பாளர் அன்பரசன், யாழ். மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழினி, தமிழீழ சுகாதாரசேவைகள் பொறுப்பாளர் அருண்மாஸ்ரர், தீவகக் கோட்ட சிறப்புப் பொறுப்பாளர் கண்ணன் ஆகியோர் தலைமை தாங்குவர்.

அததுடன், தனியார் கல்வி நிலை யங்களைச் சேர்ந்த மாணவர்கள், ஆசிரியர்கள், யாழ். பல்கலைக்கழக மாணவர்கள், தேசிய எழுச்சிப் பேரவை அங்கத்தவர்கள், சர்வதேச மாணவர்பேரவை உறுப்பினர்கள் ஆகியோர் உட்பட அனைத்துத் துறைசார்ந்தவர்களும் இப் பிரசார நடவடிக்கைகளில் இணைந்து செயறபடவுள்ளனா.

எமது மக்களை விழிப்புணர்வுடன் இருக்கச்செய்வதற்காக மேற்கொள்ளப்படும் இவ்வாறான எமது நடவடிக்கைகளுக்கு பத்திரிகைகள், துறைசார்ந்த அமைப்புகள் மற்றும் தனியார் துறையினர் உட்பட அனைத்துத் தரப்பினரும் பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

(தி-16,3,7)

## நாடக அறிமுக விழா

(மருதங்கேணி)

ஒக்ஸ்பாம் நிறுவனத்தின் ஆதரவுடன் அழகியல் கலா மன்றத்தினரின் நெறியாள்கையில் உருவான எயிட்ஸ் நோய் தொடர்பான விழிப்புணர்வு விவரணச் சித்திர நாடக அறிமுக விழா கடந்த ஞயிறன்று கிளிநொச்சியில் இடம்பெற்றது.

கிளிநொச்சி மாவட்ட அழகியல் கலாமன்ற முதல்வர் க.விஜயசேகரன் தலைமையில் கலாமன்ற வளாகத்தில் மேற்படி நிகழ்வு இடம்பெற்றது.

வட்டக்கச்சி அக்கராயன் மகா வித்தியாலய மாணவர்கள் மற்றும் அழகியல் கலாமன்ற ஆசிரியர்களால உருவாக்கப்பட்ட எச்.ஐ.வி எயிட்ஸ் இனப்பெருக்க சுகாதார விழிப்புணர்வு தொடர்பான உயிர் கொல்லி விவரணச் சித்திரமும் இங்கு வெளியிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(தி-35)

### முல்லை மாவட்டத்தில்

# கமக்காரர் அமைப்புக்களை

# அமைக்க நடவடிக்கை

(மருதங்கேணி)

முல்லைத்தீவு மாவட்ட விவசாயிகளை ஒரே அமைப்பின் கீழ் கொண்டுவந்து விவசாயம் தொடர்பான தமது பிரச்சினைகளைத் தாமே தீர்க்கும் முகமாக கமக்காரர்கள் ஒன்று சேர்த்து கமக்கார அமைப்புக்களை உருவாக்கி வருவதாக புதுக்குடியிருப்பு கமநலசேவை நிலைய பெரும்பாக உத்தியோகத்தர் மகாதேவராஜா தெரிவித்துள்ளார்.

இதுவிடயம் குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், விவசாயிகளை ஒரே அமைப்பின் கீழ் கொண்டுவருவதன் மூலம் விவசாயிகளின் முக்கிய பிரச்சினைகள் வெளிக்கொண்டு வரப்பட்டு அதற்கான தீர்வுகளை விரைவில் பெறமுடியும். அதேவேளை, சந்தைபபடுத்த முடியாதிருக்கும் பெரும் தொகையான நெல் உட்பட மற்றும் பலவகையான விவசாய உற்பத்திப் பொருட்களையும் இவ் அமைப்பின் ஊடாக சந்தைப்படுத்துதல் மூலம் பெரும் பிரச்சினையைத் தீர்க்க முடியும்.

அத்துடன், காலத்திற்குக் காலம் விவசாயிகளுக்கு தேவையான உள்ளீடுகள், கிருமிநாசினிகள் மற்றும் இலகுபடுத்தக்கூடிய நவீன கருவிகள், நவீன விவசாய முறைகள் என்பனவற்றையும் இந்த அமைபபின் ஊடாகப் பெற்று விவசாயிகளுக்கு வழங்கமுடியும் எனக்குறிப்பிட்டுள்ளார்.

(தி-35)

# இரணைமடுக்குளம் புனரமைப்பதில்

## அரச அதிகாரிகள் அசமந்தம்

## கிளி. அரச அதிபர் கவலை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி இரணைமடுக் குளத்தைப் புனரமைப்பதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்ற போதிலும் இதனைப் புனரமைப்பதற்கு வேண்டிய நிதியை ஒதுக்கீடு செய்வதில் அரச அதிகாரிகள் அக்கறை காட்டாது அசமந்தமாக இருந்து வருவதாக கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் தி.இராசநாயகம் கவலை தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி உதவி விவசாயப் பணிமனையில் நடைபெற்ற கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள சிறந்த விவசாயிகள், பண்ணையாளர்களைக் கௌரவிக்கும் நிகழ்வில் உரையாற்றும்போதே அரச அதிபர் கவலை வெளியிட்டுள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

கிளிநொச்சி மாவட்டத்தின் புனரமைப்பு வேலைத் திட்டங்கள் தொடர்பாக பல தடவைகள் அரச உயர் அதிகாரிகளிடம் கேட்டிருந்தும் இதுவரை எந்தவிதமான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

இரணைமடுக் குளத்திலிருந்து பல்லாயிரக்கணக்கான குடும்பங்கள் பயனடைந்து வரும் நிலையில் அக்குளத்தைப் புனரமைக்கவேண்டியது மிக அவசியமானது எனக் குறிப்பிட்டுள்ளார்.

கிளிநொச்சி மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் திருமதி ஆனந்தராசா தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில்,சிறந்த நெற்செய்கையாளர்களாக 10 விவசாயிகளும் சிறந்த மேட்டுநிலச் செய்கையாளர்களாக 10 விவசாயிகளும் சிறந்த வதிவிட வேளாண்மையாளர்களாக 10 பண்ணையாளர்களும் கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வில் தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் சோ. தங்கன், அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள் மற்றும் விவசாயிகள், பண்ணையாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

(தி-18,64)

# பெண்கள் விழிப்படைய வேண்டும்

## புலிகள் துண்டுப்பிரசுரம்

(கிளிநொச்சி)

பெண்களுக்கு இழைக்கப்படும் வன்முறைகளுக்கு எதிராக பெண்கள் சமூகம் விழிப்பாக இருக்க வேண்டும் என தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு-அம்பாறை மாவட்ட அரசியல் துறை அலுவலகம் கேட்டுள்ளது.

இது தொடர்பாக துண்டுப்பிரசுரம் ஒன்றையும் அரசியல் துறை அலுவலகம் வெளியிட்டுள்ளது.

அந்த துண்டுப்பிரசுரத்தில், சமாதானச் சூழ்நிலை தோன்றியுள்ள போதும் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் தூண்டப்பட்டே வருகின்றன. இவ் வன்முறைகள் பெரும்பாலும் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியிலேயே அதிகமாக இடம் பெறுகின்றன.

எனவே,எமது சமூகத்தில் உள்ள பெண்கள் இத்தகைய வன்முறைச் சம்பவங்களை முறியடிக்கும் வகையில் தம்மைத் தயார் படுத்திக் கொள்ள வேண்டும்.

அத்துடன், இது விடயத்தில் மிகுந்த விழிப்பாகவும் எச்சரிக்கையாகவும் நடந்துகொள்ள வேண்டும். அதற்கு நாம் எமது பூரண ஆதரவை வழங்குவோம் என்றுள்ளது.

(தி-64,10)

## தெற்காசிய வர்த்தக வலயம்

(கொழும்பு)

தெற்காசியப் பிராந்தியத்தில் சுதந்திர வர்த்தக வலயத்தை அமைக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக வெளிவிவகார அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதற்கான உடன்படிக்கையை கைச்சாத்திடுவதற்கான ஏற்பாடுகளை பூர்த்தி செய்வதற்காக சார்க் அமைப்பின் அங்கத்துவ நாடுகளின் வர்த்தகச் செயலாளர்கள் நேற்று இஸ்லாமபாத்தில் கூடினர்.(தி-60-10)



# நத்தார் சிறப்பு மலர் -2003

எம் அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள்,
நண்பர்கள் யாவருக்கும்
நத்தார் புதுவருட வாழ்த்துக்கள்
சகலவிதமான பட வேலைகளையும் குறித்த நேரத்தில்
செய்து பெற்றுக்கொள்ளலாம்

## டானியல் படமாடம்

635, ஆஸ்பத்திரி வீதி, [C/8004] யாழ்ப்பாணம்.

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள்
யாவருக்கும் எம்மினிய
நத்தார் வாழ்த்துக்கள்
சகலவிதமான புதிய, பழைய தமிழ் திரைப்படங்கள்,
தரமான ஆங்கிலத் திரைப்படங்கள் போன்றவற்றை
வாடகைக்குப் பெற்றுக்கொள்ள



## குரு வீடியோ சென்ரர்

26A, பீச் றோட், குருநகர், யாழ்ப்பாணம். [C/8002]

அன்பு உள்ளங்கள் அனைவருக்கும் எம்
உள்ளம் கனிந்த கிறிஸ்மஸ் நல்வாழ்த்துக்கள்
◆அரிசி ◆மிளகாய் ◆கோப்பி ◆சீயாக்காய்
◆தானிய வகைகள் ◆ஈர அரிசி
போன்றவற்றை அரைத்துக்கொள்ள நாடுங்கள்

## குமரன் கிறைன்டிங் மில்

354, பாங்சால் வீதி, யாழ்ப்பாணம். [C/8003]

அனைவருக்கும் எம் இதயம் நிறைந்த
நத்தார் வாழ்த்துக்கள்
சுவையான - தரமான உணவு வகைகளுக்கு

## முஸ்லீம் ஹோட்டல்

322, பீச் றோட், குருநகர், யாழ்ப்பாணம். [C/8001]

எமது அன்புக்குரிய அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள்,
ஆதரவாளர்கள், வர்த்தகப்பெருமக்கள் யாவருக்கும்
இனிய நத்தார் வாழ்த்துக்கள்





## PHOENIX

## பிளாஸ்ரிக் என்றால்

## PHOENIX

நீண்ட பாவிப்பிற்கு சுலபமாக எடுத்துச்
செல்வதற்கு கண்கவர் நிறங்களில் குறைந்த
விலையில் உங்கள் மனதிற்குப் பிடித்த
கதிரைகள், மேசைகள், ஸ்ரூல் வகைகள்
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளலாம்

PHOENIX

2 Year Guarantee 2 வருட உத்தரவாதம்

எமது யாழ் ஏக
விநியோகஸ்தர்கள்

## கஜமுகன் காட்வெயார்ஸ்

147, 149, ஸ்ரான்லி வீதி, தொலைபேசி:- 021 - 222 2833 யாழ்ப்பாணம்.

GROUP DISTRIVUTORS (PVT) LTD
445, NEGOMBO ROAD, WELISARA.

[7936]

எல்லோருக்கும் எம் இதயம் கனிந்த
கிறிஸ்மஸ் நல் வாழ்த்துக்களைத்
தெரிவித்துக் கொள்கின்றோம்.

## எஸ்.ஜெ.எம்போறியம்

## &

## சென் ஜோசப் மொபைல் சேவிஸ்

(எலக்ரோனிக் அன் எலக்றிக்கல் மொத்த சில்லறை வியாபாரம்)

360/7, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.
0777 - 571926

மொபைல் சேவிஸ்
அச்சுவேலி மேற்கு.
0777 - 571920
0777 - 283786

[C/8006]

## யாவருக்கும் இனிய
## நத்தார் வாழ்த்துக்கள்

தென்னிந்தியாவிலிருந்து மூன்றாவது முறையாக
யாழ்ப்பாணம் என்னும் புண்ணிய பூமிக்கு வருகை
தந்துள்ள பரம்பரை சோதிடக் கலையில் புகழ்பெற்ற
சிவபால ஜோதிடர் புத்தாண்டை முன்னிட்டு 2004ஆம்
ஆண்டு புதுப்பலன்கள் அறிவதற்கு மீண்டும் யாழ். மக்களின்
வேண்டுகோளுக்கு இணங்க வருகை தந்துள்ளார்

பார்க்கும் நேரம் காலை 9.00 - 6.00 மணி வரை
கைரேகை மட்டும் காலை 9.00 - 1.00 மணி வரை

**ராஜகுருசாமி** அவர்கள்

* கைரேகை * ஜாதகம் * எண்கணிதம்
* பெயர் ராசி * திருமணப் பொருத்தம்

இவற்றில் பலவருட அனுபவமும் புகழும் பெற்று மலேசியா,
சிங்கப்பூர், தாய்லாந்து ஆகிய இடங்களுக்கும் சென்று வந்தார்.

[C/8007]



# நத்தார் சிறப்பு மலர் - 2003





## அரசாங்க அதிபரின் வாழ்த்துச் செய்தி

ஜேசுபிரான் அவதரித்த தினமாகிய கிறிஸ்மஸ் தினத்தில் எமது மக்களுக்கு சாந்தி, சமாதானம், சுபீட்சம் ஏற்பட்டு நல்வாழ்வு மலர வேண்டுமென வாழத்துவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன். மேலும், இத்தினத்தில் வலம்புரி பத்திரிகை ஒரு சிறப்பிதழை வெளியிடுவதையிட்டு எனது பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

செ.பத்மநாதன்,
அரசாங்க அதிபர்,
யாழ்.மாவட்டம்.

## நற்செய்தி நாதரையே நாம் துதிப்போம்

வீட்டினிலே மகிழ்வோடு வட்டக் குடிலமைத்து
வையகமும் வளம் பெறவே வைக்கோலில் வைரமதாய்
மாட்டிடைத் தொழுவமது பனித்துளியால் நீராட்ட
மாண்புறு மேய்ப்பனவர் இறைமகனாய் வந்துதித்தார்
நாட்டிலுயர் நீள் பாதை நாளுமே சீர் பெருக
நாதனவர் அருளும் நற்செய்தி கூடிவரும்
நீட்டும் கரமெலாம் நட்புறவு சேர்ந்துவர
நம்யேசு நாதரையே நெஞ்சார துதிப்போமே.

கே. ஆர். திருத்துவராஜா,
அல்வையூர்.

## பாலன் உதித்த நாள்

பாலன் ஒருவன் பாரினில் உதித்தனனாம்
நல்வழி காட்டி எம்மை நடத்தினனாம்
தேவதூதன் மனித குமாரனாய் அவதரித்தானாம்
அற்புதங்கள் பல தினமும் நடத்தியவனாம்
எம்மை மேய்ப்பனாய் இருந்து காப்பவனாம்
பாவிகள் திருந்தி நடந்திட உதவியவனாம்
அவன் உதித்ததே நத்தார் பண்டிகை நாளாம்
அவனி எங்கணும் பாலனைப் போற்றிடுவோம்!

இ.வி.இரத்தினம்.

## சமாதான ஒளிதேடி

தினந்தினம் புதுப்புது
உதயங்களாய்
எம் நாயகன் பாலகனின் பிறப்பு
உன்னத அருள்வீசி
மிளிர்கின்றது - உவகை தருகின்றது!

ஓயாத அலை போல
ஒன்றித்த அவர் நினைவு
சேயாக நாம் மகிழ
சேர்த்தே வரந் தருகிறது!

மீட்பினொளி ஆகி வந்த
மீட்பர் அவர் வழிதனிலே
சமாதான ஒளி தேடி
சரணடைவோம் பாதந்தனில!

S.நந்தினி

## 2003ஆம் ஆண்டு கிறிஸ்மஸ் விழாவை அர்த்தமுள்ள வகையில் எப்படிக் கொண்டாடலாம்?

இலங்கை மண்ணில் கடந்த இரண்டு தசாப்தங்களாக நிகழ்ந்து வந்த கொடிய போரும் அதன் கொடூர விளைவுகளும் பேச்சுவார்த்தை, புரிந்துணர்வு, சமாதான ஒப்பந்தம் என்பவற்றின் வழியாக ஒருவாறு முடிவுக்குக் கொண்டுவரப்பட்டன. இதன்பயனாக கடந்த இரண்டு ஆண்டுகளும் ஓர் அமைதியான சூழ்நிலையையும் இயல்பு வாழ்க்கை நிலையையும் நாம் பெற்றிருந்தோம்.

பொதுவாகவே ஆண்டின் இறுதிப் பகுதி கடந்த பல வருடங்களாக பேச்சுவார்த்தை, யுத்த நிறுத்தம், சமாதானம் என்ற சிந்தனைகளையே எம் மனக்கண்முன் கொண்டுவந்து எமக்கு ஆறுதலையும் நிம்மதியையும் தந்திருந்தது. அநேக வேளைகளில் அவை எதிர்பார்த்த யுத்தநிறுத்தத்தையும் சமாதானத்தையும் கொண்டுவரவில்லை. ஆயினும் மனதளவில் சமாதானத்துக்கான ஒரு தேடலையும் அமைதியான மனநிலையையும் தந்திருந்தது.

இவ்வாண்டோவெனில் இவற்றிற்கு மாறாக எம்மண்ணில் இருந்த அமைதியையும் சமாதானத்தையும் கேள்விக்குறியாக்கி எமது மகிழ்வான மனதுகளில் குழப்பத்தையும் ஏக்கத்தையும் கொண்டுவந்துள்ளது.

இந்நிலையில் வருகின்ற கிறிஸ்து பிறப்பு விழாவை நாம் எவ்வாறு கொண்டாட முடியும்? எவ்வாறு எமக்கு அர்த்தமும் ஆழமும் மிக்கதாய் செய்யமுடியும்? என்று சிந்திப்பது பொருத்தமானது.

இக்காலப்பகுதியில் உடைந்துபோன கட்டிடங்களையும் சிதைந்துபோன மக்கள் வாழ்வையும் சீரழிந்துபோன கலாச்சார மதிப்பீடுகளையும் கட்டியெழுப்பும் பணியில் அரச நிறுவனங்களும் அரச சார்பற்ற நிறுவனங்களும் மத நிறுவனங்களும் மனிதாபிமான உதவி நிறுவனங்களும் தனிநபர்களும் குடும்பங்களும் ஈடுபட்டு வந்தன.

இந்த சமாதானகால நிலைகளையும் அதன் விளைவுகளையும் அனுபவிக்கத் தொடங்குவதற்கு முன்னரே எம்மை அச்சுறுத்திக்கொண்டிருந்த போர் திரும்பவும் மூண்டுவிடுமோ என்ற ஏக்க உணர்வு எல்லார் மனதுகளையும் பற்றிப் பிடித்துள்ளது. ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் இடையில் மூண்டுள்ள அதிகாரப் போரும் கருத்து மோதலும் தமிழ்மக்களின் சுபீட்சமான எதிர்கால வாழ்வை மோசம் செய்துவிடுமோ என்று அஞ்சவேண்டியுள்ளது.

உண்மையில் மருதமடு அன்னையின் தென்னிலங்கை பவனியின் பின்னரே இலங்கை மண்ணில் சமாதானமும் அமைதியும் நடைபெறத் தொடங்கியது. மனித வலிமையாலும் வல்லமையாலும் சாதிக்க முடியாதவற்றை இறைவனுடைய துணையால் செபத்தால் சாதிக்கமுடியும் என்ற எண்ணக் கருவில் நாம் நம்பிக்கை கொள்ளவேண்டிய காலம் இது.

இலங்கை மண்ணில் நீதியோடு கூடிய எந்தத் தீர்வு ஏற்பட வேண்டுமானாலும் அது இலங்கையின் இரண்டு பெரிய அரசியல் கட்சிகளின் முழு ஒத்துழைப்போடும் முயற்சியோடும் மட்டுமே நடைபெறமுடியும். இன்று இவ்விரண்டு பெரிய கட்சிகளின் தலைவர்களான ஜனாதிபதியும் பிரதமரும் பதவியில் இருக்கின்ற வேளையில் இந்நிகழ்வு நடைபெற சாத்தியக்கூறு உண்டு என்பதை உணர்ந்து இறைவனே இவர்கள் மனதுகளை மாற்றி நிரந்தர அமைதிக்கு வழிவகுக்க வேண்டும் என வேண்டுவோம்.

இருளில் நடந்து வந்த மக்கள் பேரொளியைக் கண்டனர். மரண நிழல்படும் நாட்டில் உள்ளோருக்கு ஒளி உதித்து சுடர் வீசிற்று என்ற இறைவாக்கினர் எசாயாவின் வார்த்தைகள் எமக்கு நம்பிக்கை ஊட்டும் வார்த்தைகள். இவ்வார்த்தைகள் எம் மண்ணிற்கும் மக்களிற்கும் நிரந்தர ஒளிவீசும் வார்த்தைகளாக மாறட்டும்.

2004ஆம் ஆண்டு புதிய ஆண்டை ஆரம்பிக்க இருக்கின்ற வேளையில் இறைவனுடைய வல்லமை உள்ள கரத்தால் தமிழ்மக்களின் குழப்பமான நிலை நீங்கி நீதியோடு கூடிய ஓர் நிரந்தரத் தீர்வு ஏற்படவேண்டி நத்தார் புதுவருட வாழ்த்துக்களை வலம்புரி வாசக அன்பர்கள் யாவருக்கும் தெரிவிக்கின்றோம்.

அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை


அனைவர்க்கும் எம் உள்ளம் நிறைந்த கிறிஸ்மஸ் நல்வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றோம்

செல்வம் ஸ்ரோர்ஸ்
330, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.Phone :- 021 - 222 3817

மூன்று நட்சத்திர உணவகம்
162, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.Phone :- 021- 222 3590

யாழ் போள் சொப்
10, நவீன சந்தை (மேல்மாடி), யாழ்ப்பாணம்.
T.Phone :- 021 - 222 7125

[C/8005]











# நிரந்தர சமாதானத்தை உருவாக்க கிறிஸ்துவின் பிறப்பில் உறுதி செய்வோம்

## யாழ். தளபதி மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபால நத்தார் செய்தி

உலகெங்கும் வாழும் கோடிக் கணக்கான கத்தோலிக்க மக்கள் கௌரவத்துடனும் பக்தியுடனும் சந்தோசத்துடனும் இயேசுபிரான் பிறப்பைக்கொண்டாடும் நத்தார் தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணத்தில் வாழும் கத்தோலிக்க பக்தர்களுக்காக நத்தார் வாழ்த்தை தெரிவிப்பதில் நான்,எனக்குக் கிடைத்த பாக்கியமாகக் கருதுகிறேன்.

இந் நாட்டில் கிறிஸ்தவ மதம் ஆரம்பமாக போத்துக்கீசர்கள் வருகையுடன்,சுமார் 1505 வருடங்களுக்கு முன் கத்தோலிக்க மதம் ஆரம்பிக்கப்பட்டது என சான்றுகள் கூறுகின்றன. குறிப்பாக கரையோரப் பகுதியில் வாழ்ந்த மக்கள் மத்தியிலே கிறிஸ்தவ மதம் மிகவும் வேகமாகக் கடைப் பிடிக்கப்பட்டன. அன்று ஆரம்பமான கிறிஸ்தவ மதம் இன்று இலங்கை பூராகவும் இலட்சக் கணக்கான மக்கள் நத்தார் தினத்தை மிக கௌரவமாக பக்தியுடன் கொண்டாடுகின்றார்கள். அண்மைக்காலமாக இலங்கையில் கலாசாரம் மற்றும் மத நடவடிக்கை காரணமாக நன்மைகள் உருவாகிக் கொண்டிருக்கின்றன என்பதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன. 1948 ஆம் ஆண்டு பிரித்தானியாவிடம் இருந்து இலங்கைக்கு சுதந்திரத்தைப் பெற்றுக் கொடுக்க அகிம்சை வழியில் போராடியதில் கிறிஸ்தவ மக்களின் பங்களிப்பு பெருமளவில் கிடைத்தது. சகல இன மக்களுடனும் சகல மதத்தலைவர்களுடனும் இதுவரை கிறிஸ்தவ மக்கள் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் போலவும் இந்நாட்டின் அபிவிருத்திக்காகவும் வழங்கிய பங்களிப்பும் அதிகமெனவே கூறவேண்டும்.அதேபோல் அவர்கள் நல்லெண்ணத்துடன் வாழும் கௌரவமானவர்கள் எனவும் கூற வேண்டும்.

இவ்வுலகில் வாழும் சகல மனிதர்களும் தமது மதம் என்ற நம்பிக்கையுடன் செயல்படுகின்றனர். இவ்வுலகில் உதித்த சகல மதத்தலைவர்களும் போதகர்களும் தர்மத்தையே போதித்தார்கள்.அதேபோல் இயேசுபிரான் போதித்ததும் அதுவேதான். மற்றவர்களை நேசித்து அவர்கள் மீதுஅன்பு செலுத்துங்கள்.கருணை காட்டுங்கள் என்று இயேசுபிரான் கூறியதுபோல் உலக மக்கள் அனைவரும் ஒவ்வொருவரும் கருணையுடனும் மற்றவர்களை நேசித்து அன்பு செலுத்தினால் இவ்வுலகில் எந்தவொரு இடத்திலும் மோதல்களும் யுத்தமும் இடம்பெறாது. யுத்தம், இரத்தம் சிந்தி புரட்சி,மோதல் என்பன நடந்த காலத்தில்தான் இயேசு கிறிஸ்து இவ்வுலகில் உதித்தார். அன்றுமுதல் சமாதானம், அமைதியைப் பற்றியே அவர் போதித்தார். அப்போதே அவர் தெரிந்திருந்தார் சமாதானமும் அமைதியும் இல்லாத மனிதவாழ்க்கை ஒரு வாழ்க்கையாகாது என்பதை. அதனால் தான் நாம் இன்றும் சமாதானத்தின் குமாரன் என இயேசுபிரானைக் கூறுகிறோம். அவர் இன, மதம், ஜாதி என்ற வேற்றுமையின்றி சகல மக்களும் ஒரேவிதமான தர்மததைப் போதனை செய்தார்.

தற்போது நம் நாட்டில் உருவாகியுள்ள துன்பநிலையில் இருந்து விடுபட இயேசு கிறிஸ்துவின் வழிகாட்டலும் போதனைகளுமே போதுமானது என நான் நினைக்கின்றேன்.



அனைவரும் அமைதியாகவும் ஒற்றுமையாகவும் கருணையுடனும் வாழ வழிக்காட்டிய அவர், ஒருவரை ஒருவர் பழிவாங்க இடமளிக்கவில்லை. அதனால் இரு தசாப்தங்களாக இடம்பெறும் இந்நாட்டு யுத்தத்தை முடிவிற்குக் கொண்டு வந்து நிரந்தர சமாதானத்தை உருவாக்க கிறிஸ்து பிறப்பில் உடன்படுவோமாக. புனித தினமான இந்நாளில் நாம் அனைவரும் ஒற்றுமையுடன் செயல்பட பிரார்த்திக்கின்றேன். மொழியில் மாற்றம் இருந்தாலும் இன்றைய தினத்தை தென்பகுதியில் வசிக்கும் சிங்கள, பறங்கிய மக்களும் இந்தப் புனித நத்தார் தினத்தை உங்களுடன் கொண்டாடுகின்றார்கள் என்பதை ஞாபகத்தில் கொள்ளுங்கள்.

## புற்று நோய் சிகிச்சை

(யாழ்பபாணம்)

யாழ்.குடாநாட்டு புற்று நோயாளர்களுக்குச் சிகிச்சை வழங்குவதற்காக மகரகம புற்றுநோய் வைத்தியசாலையின் வைத்திய கலாநிதி என். ஜெயகுமாரன் இங்கு வருகை தந்துள்ளார்.

மேற்படி நோயாளர்களுக்கான புற்றுநோய் சிகிச்சை நாளை வெள்ளிக்கிழமையும் மறுநாள் சனிக்கிழமையும் தெல்லிப்பழை புற்றுநோய் சிகிச்சை நிலையத்தில் வழங்கப் படவுள்ளதாக யாழ். சுகாதார சேவைகள் பிரதி மாகாணப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (தி-18)

## விவசாய உதவித் திட்டம்

(மட்டக்களப்பு)

பேரி அனர்த்தங்களால் பாதிக் கப்பட்ட மட்டக்களப்பு மாவட்டத் திற்கான விவசாய உதவித் திட்டங்களை உலக உணவு ஸ்தாபனம் மீண்டும் அமுல் செய்து வருகிறது.

அங்கு இத்திட்டத்தினை அமுல படுத்துவதற்கென ஒருகோடி ரூபா நிதியை உலக உணவு ஸ்தாபனம் ஒதுக்கீடு செய்துள்ளது.

இத்திட்டத்தின் முதற் கட்டமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் மீளக்குடியமர்ந்துள்ள விவசாயக் குடும்பங்களுக்கு விவசாய உள்ளீடுகள், உரவகைகள், கிருமி நாசினிகள் , விவசாய உபகரணங்கள் என்பன வழங்கப்படவுள்ளன. (தி-60,10)

## கூட்டணிப் பிரச்சினைகளைத் தீர்க்க கூட்டமைப்பு உறுப்பினர்கள் முயற்சி

(கொழும்பு)

தமிழர் விடுதலைக் கூட்டணிக்குள் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளை தீர்க்கும் நடவடிக்கையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் இறங்கியுள்ளதாக தெரியவருகிறது.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரியை கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் தலைமைப் பதவியில் இருந்து நீக்க மேற்கொண்ட முயற்சிகளையடுத்து கூட்டணிக்குள பெரும் சர்ச்சைகளும் பிளவுபாடும் தோன்றியிருந்தமை தெரிந்ததே.

இந்நிலையில் பிளவுபடும் நிலையில் உள்ள தமிழர் விடுதலைக் கூட்டணியை ஒன்றிணைக்கும் முயற்சியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் மும்முரமாக ஈடுபட்டு வருவதாகவும்,சம்பந்தப்பட்டவர்களோடு இது குறித்து பேச்சுவார்த்தை நடத்தி வருவதாகவும் கூறப்படுகிறது.

அத்துடன், கூட்டணியின் தலைவர் ஆனந்தசங்கரியின் அனுமதி யின்றி மத்திய செயற்குழுக் கூட்டத்தை நடத்த முடியாதென கொழும்பு மாவட்ட நீதி மன்றம் கடந்த 17ம் திகதி இடைக் காலத் தடை உத்தரவு பிறப்பிக் கப்பட்டுள்ளது தெரிந்ததே. (தி-61,10)

## கிழக்கு மாகாண மீனவர்களுக்கு அமெரிக்கா நிதி உதவி

(கொழும்பு)

கிழக்கு மாகாண மீனவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கு அமெரிக்கா ஒரு லட்சத்து 60 ஆயிரம் டொலர்களை நன்கொடையாக வழங்க முன்வந்துள்ளது.

இந்நிதி யு. எஸ். எயிட் நிறுவனத்தின் ஊடாகவே வழங்கப்படுமென இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அண்மையில் கிழக்கு மாகாணத்திற்கு விஜயம் செய்திருந்தபோது தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை ஆகிய மாவட்டங்களில் வாழும் சுமார் 5ஆயிரத்திற்கும் மேற்பட்ட மீனவர்கள் இதன் மூலம் பெரும் நன்மைகளை அடையவுள்ளனர். (தி-60,10)

## தேசிய நல்லிணக்க சபை அமைக்க நடவடிக்கை

(கொழும்பு)

தேசிய நல்லிணக்க சபையொன்று விரைவில் நியமிக்கப் படவுள்ளதாக பொது நிர்வாக முகாமைத்துவ -அமைச்சர் வஜிர அபயவர்த்தன தெரிவித்துள்ளார்.

தொழில்துறை சார் பிரச்சினைகளை துரிதமாகத் தீர்த்து வைப்பதற்காக அரசாங்கத்திற்கும் தொழிற்சங்க அமைப்புகளுக்கும் இடையிலான தொடர்புகளை ஒருங்கிணைப்பது இச்சபையின் முக்கிய நோக்கமாகும்.

தொழிற்சங்க அமைப்புக்களின் கருத்துக்களை நாட்டின் அபிவிருத்திக்காக பயன்படுத்திக் கொள்வது தேசிய நல்லிணக்க சபையின் மற்றும் ஒருநோக்கம்.

அடுத்த ஆண்டு முற்பகுதியில் அமைக்கப்படவுள்ள இச்சபையில் ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர்களும் தொழிற்சங்க பிரமுகர்களும் அங்கம் வகிக்கவுள்ளனர். (தி-60,10)

## வடக்கு-கிழக்குப் பகுதிகளில் யுத்தம் காரணமாக 84 ஆயிரம் மாணவர்களின் கல்வி இடைநிறுத்தம்

(திருநெல்வேலி)

கடந்த காலங்களில் இடம்பெற்ற யுத்த நடவடிக்கைகள் காரணமாக வடக்கு-கிழக்கில் இதுவரை 84 ஆயிரம் மாணவர்கள் கல்வியை இடைநிறுத்தியுள்ளதாகத் தெரிய வருகிறது.

கடந்த காலங்களில் இடம்பெற்ற யுத்த நடவடிக்கைகளின் போது பெற்றோரை இழந்தமை மற்றும் வறுமை உட்பட பல காரணங்களாலேயே கல்விகற்க வேண்டிய இத் தொகையினர் பாடசாலைக் கல்வியை இழந்துள்ளனர்.

இந்நிலைமையை மாற்றியமைத்து பாடசாலைக்கல்வியைப் பெறத் தகுதி உடையவர்கள் மற்றும் உரியவயதை அடைந்தவர்களை 2004 ஆம் ஆண்டில் பாடசாலைகளில் சேர்ப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதற்கமைய வடக்கு-கிழக்கிலுள்ள 74 கல்வி வலயங்கள் தோறும் கட்டாயக் கல்விக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இக்குழுக்கள் பாடசாலைகளிலிருந்து இடைவிலகிய மாணவர்களை இனம்கண்டு, அவர்கள் பற்றிய விபரங்களைத்திரட்டி மீண்டும் பாடசாலைகளில் இணைந்து கல்வியைப் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் அவர்களைத் தூண்டுதல் செயற்பாடுகளை மேற்கொண்டு வருவதுடன், யுனிசெவ் நிறுவனத்தின் அனுசரணையுடன் இவர்களுக்குப் பணம் மற்றும் பொருள் உதவிகளையும் வழங்கிவருகின்றன.

இதன் மூலம் வடக்கு-கிழக்கில் பாடசாலைக் கல்வியை இடைநிறுத்தியுள்ள 50சதவீதமானோர் அடுத்த 2004ஆம் ஆண்டில் பாடசாலைகளில் சேர்த்துக்கொள்ளப்படுவதுடன், ஏனையோர் அடுத்த 2 வருடங்களுக்குள் பாடசாலைகளில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

கடந்த காலயுத்த அனர்த்தங்களால் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, திருகோணமலை மற்றும் முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களிலேயே அதிகளவானோர் பாடசாலைகளிலிருந்து இடைவிலகியுள்ளமை குறிப்பிடத்தக்கது (தி-43)

## புல்லுமலை பதுங்கு குழி விசாரணைகளில் தாமதம்

(அம்பாறை)

மட்டக்களப்பு புல்லுமலைப் பிரதேசத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளால் அமைக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படும் பதுங்கு குழி தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதில் சற்றுத் தாமதம் ஏற்படலாம் என்று யுத்த நிறுகதக் கண்காணிப் புக்குழு அறிவித்துள்ளது.

மட்டக்களப்பு புல்லுமலைப் பிரதேசத்தில் விடுதலைப்புலிகள் பதுங்கு குழி அமைத்திருப்பதாகக் கூறப்படும் விடயத்தை மட்டக்களப்பு மாவட்ட யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு, இலங்கை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினிடம் அறிவித்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும். (வ)

## வவுனியா மாவட்டத்தில் 4097 குடும்பங்கள் இவ்வாண்டு மீள்குடியேற்றம்

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் இவ்வாண்டு ஜனவரி மாதம் முதல் இன்று வரை 4ஆயிரத்து 97 குடும்பங்கள் மீளக் குடியமர்ந்துள்ளதாக வவுனியா மாவட்டச் செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளது.

அவ்வறிக்கையில், வவுனியா பிரதேச செயலர் பிரிவில் ஆயிரத்து 313 குடும்பங்களும் வவுனியா தெற்கு பிரதேச செயலர் பிரிவில் 348 குடும்பங்களும் வெங்கலச் செட்டிக்குளம் பகுதியில் 369 குடும்பங்களும் வவுனியா வடக்குப் பகுதியில் 2 ஆயிரத்து 67 குடும்பங்களும் மீளக்குடியமர்ந்துள்ளன.

இக்குடும்பங்களுக்குத் தேவையான அடிப்படைவசதிகள ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் நிதியுதவியுடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அத்துடன், இங்கு மீளக் குடியேறியுள்ள குடும்பங்களுக்கான மீள் குடியேற்றக் கொடுப்பனவுகள் யாவும் தற்போது கட்டம் கட்டமாக வழங்கப்பட்டு வருகின்றன என அவ்வறிக்கையில் மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (தி-10,60)





## ஆண் பிள்ளைதான் வேணும்

"ஆண் பிள்ளைதான் வேணும்" என்று மீனாவின் மாமா விரு கூறினார். அவருடைய மருமகள் லீலா தாய்மையுற்றுள்ளார். விருவுக்கு தன் முதலாவது பேரப்பிள்ளை ஆணாக இருப்பதே விருப்பம். மீனா மாமாவீட்டிற்கு லீலாவைப் பார்ப்பதற்காகப் போயிருக்கிறாள்.

முதலாவது பேரப்பிள்ளை ஆணாக இருந்தால் அவன் குடும்பத்திற்கு புகழைக்கொண்டு வருவான் என்று விரு நம்புகின்றார். ஆண்கள் சொத்துச் சேர்ப்பார்கள்; பணம் சம்பாதிப்பார்கள். குடும்பத்திற்கு நல்ல வாழ்க்கையை அமைப்பார்கள் என்று விரு நம்புகின்றார். வங்கிக்குப் போகும் வழியில் இந்தக் கருத்துக்களை விரு மீனாவுக்குக் கூறுகிறார். புதிய உழவு இயந்திரம் ஒன்றை வாங்குவதற்கு கடன் பெறுவதற்காகவே விரு வங்கி மனேஜரைப் பார்ப்பதற்குப் போய்க்கொண்டிருந்தார். அங்கே புதிய மனேஜர் ஒரு பெண்ணாக இருப்பதைக் கண்டு விரு ஆச்சரியமடைகிறார்.

சில நாட்களுக்குப் பின்பு பிள்ளை பிறந்த செய்தியைக்கேட்பதற்காக விருவும் மீனாவும் அவர்களின் வீட்டிற்கு வெளியே ஆவலுடன் காத்திருக்கின்றனர். பெண் பிள்ளை பிறந்ததாகக் கேள்விப்பட்டதும் விருவிற்கு சரியான துக்கம். ஏமாற்றத்துடன், நகரிலிருந்து வரும் தனது மகன் ரவியை ஏற்றி வருவதற்காக மீனாவையும் கூட்டிக்கொண்டு உழவு இயந்திரத்தில் விரு ரயில் நிலையத்திற்குப் போகிறார்.



உங்கள் தொடர்புகளுக்கான எங்கள் முகவரி:-
மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழு
அறை எண்-30,
யாழ். போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.

unicef

(C/6946)

## இன்று ஒரு தகவல்

# ஆசை

"எனக்கு வாழ்வில் ஒரேயொரு ஆசை தான் சார்!" என்றார் ஒருவர் " அது என்ன?"" என்று கேட்டேன். ஆசைகளை ஒழித்து விடவேண்டும் என்பது தான் அந்த ஆசை என்றார். இப்படி ஆசைகளை ஒழிக்க வேண்டும் என்பதையே ஒரு ஆசையாகக் கொள்வது அபத்தம் என்கிறார் ஒரு பெரியவர்.

இதுபோல் ஆசைகளை ஒழிக்க ஆசைப்பட்டால் அந்த நோக்கம் நிறைவேறாதாம். அந்த முயற்சியால் புதிதாகச் சில துன்பங்கள் தான் வந்துசேருமாம். அதில் புதிதாக ஒரு ஆசை தலைதூக்கும் என்கிறார் அவர்.

ஆசைகளைத் தானாக விழவைத்து விடலாம். அதற்கு வழி என்ன தெரியுமா? "எந்த ஒரு ஆசையையுமே பூரணமாக வெற்றி கொள்ள முடியாது" என்பதை உணர வேண்டும். அதை உணர்ந்தால் ஆசைகள் தானாக விழுந்துவிடும். அதை விட்டுவிட்டு ஆசைகளை விட்டு விட வேண்டும் என்பதையே ஒரு ஆசையாக வைத்துக்கொண்டு அதற்காக கடுமையான முயற்சிகளையும் செய்து கொண்டு " நான் ஆசைகளை விடுத்து ஞானோதயம் அடைவதற்குக் கடுமையான முயற்சி செய்கின்றேன்" என்று கூறிக்கொண்டிருந்தால் எந்தக் காலத்திலும் ஞானோதயம் வரப்போவதில்லை. அதற்குப் பதிலாகத் துன்பம் தான் வந்து சேரும் என்பது அவரது கருத்து.

எந்தவொரு ஆசையையும் பூரணமாக நிறைவேற்றிக் கொள்ள முடியாதென்பதை உணரவேண்டும் என்கிறார் பாருங்கள். அது சிந்திக்கவேண்டிய விஷயம்

ஒரு ராஜா... அவரது மனதில் அமைதியில்லை. எப்போதும் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்தார். "இந்த துன்பத்தைப் போக்குவ்தற்கு ஏதாவது வழி கூறுங்கள்"என்றார். அதற்கு அந்த வேதாந்தி கூறினார்." அதற்கு ஒரு வழி கூறுகின்றேன் அது போல் செய். அதாவது உன் ராஜ்யத்திற்குள்ளே "போதும்" என்ற மனதுடன் வ்ாழும் ஒருவனைக் கண்டு பிடித்து... அவனது சட்டையை வாங்கி நீ போட்டுக்கொள்ள வேண்டும். அப்படிப்போட்டுக்கொண்டால் உனது துன்பம் தீர்ந்துவிடும்" என்றார். உடனே ராஜாவுக்கு மிகுந்த மகிழ்ச்சி.

அரண்மனையில் இருந்த அத்தனை பேரையும் ஆளுக்கு ஒரு பக்கமாக அனுப்பினார். தேடச் சொன்னார். போதும் என்ற மனதுடைய ஒருவனைக் கண்டுபிடித்துக் கூட்டி வரச்சொன்னார். எங்கெங்கோ தேடி கடைசியாக ஒருவனைக் கண்டுபிடித்தனர். அவன் போதும் என்ற மனதோடு இருப்பவன் தான். ஆனால் அவனிடம் சட்டை எதுவும் இல்லை. இடையில் கட்டிய துண்டே போதும என்ற மனதுடன் அவன் வாழ்ந்து கொண்ருடிந்தான்.

சட்டை இருந்தால் அல்லவா அதை வாங்கிப்போட முடியும். அந்த வேதாந்தி ஏன் அப்படிக் கூறினார் என்பதற்கான அர்த்தம் இப்போது தான் ராஜாவுக்குப்புரிந்தது.

இதுவரையில் கூறியது ஞானமார்க்கக் கதை தேடிக் கொண்டிருப்பவனுக்கான தகவல். இன்றைய இளைஞர்கள் இதைக்கேட்டுவிட்டு நமக்கு ஆசையே வேண்டாம் என முடிவு செய்துவிடக்கூடாது. அப்படி முடிவு செய்துவிட்டால் வாழ்வில் முன்னேறவே முடியாது. நமது முயற்சிக்கு ஆசைதான் தூண்டுகோல்.

அதனால் இந்த "ஆசை" யையும் அந்த "ஆசை" யையும் போட்டுக் குழப்பிக்கொண்டிருக்கக் கூடாது. ஆனால் ஒன்று பேராசை நமக்குத் தேவையில்லை. நாம்படும் ஆசையிலும் ஒரு நியாயம் இருக்கத்தான் வேண்டும். ஏனென்றால் நம்மில் சிலர் " நீங்கள்தானே சார் கூறினீர்கள் அதனால் தான் ஆசைப்பட்டேன் அறை கிடைத்ததுதான் மிச்சம்!" என்பார்கள் கன்னத்தைத் தடவிக்கொண்டே. அதனால் இப்போதெல்லாம் எந்தத் தகவலைக் கூறினாலும் மிகுந்த எச்சரிக்கையுடன் கூற வேண்டியுள்ளது.

ஒரு ஆள் கடை வைத்து வியாபாரம் செய்து கொண்டிருந் தான். அவனுக்கு அதிகப் பேராசை நிறையப் பணம் சேர்க்கவேண்டும் என்று. திடீரென்று ஒருநாள் அவனுக்கு உடல் நலமில்லாமல் போய்விட்டது. இனிமேல் பிழைப்பது சிரமம் என்கின்ற நிலை. மரணப் படுக்கையில் இருந்தான். உறவினர்கள் எல்லோரும் சுற்றி அமர்ந்திருந்தனர்.

இவன் மெதுவாகக் கண்ணைத் திறந்து "எனது மனைவி எங்கே? " என்றான். " இதோ இருக்கின்றேன்" என்றார் மனைவி. "மகன்மார் எங்கே? " என்றான். "இதோ பக்கத்தில் தான் இருக்கின்றனர்" என்றார் மனைவி. " மகள்மார் எல்லோரும் எங்கே? " என்றான். "எல்லோரும் இங்கேதான் இருக்கின்றனர் நீங்கள் கவலைப்படாமல் ஓய்வு எடுத்துக் கொள்ளுங்கள்" என்றார் மனைவி.

அவன் மெதுவாகக் கஷ்டப்பட்டு வாயைத்திறந்து "அடப்பாவிகளா! எல்லோரும் இங்கே இருந்தால் கடையை யார் கவனிப்பது? " என்றானாம்.

***தென்கச்சி கோ. சுவாமிநாதன்***

# பேரூர் ஆதீன முதல்வர் இலங்கை வருகை

(யாழ்ப்பாணம்)

இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சர் தி.மகேஸ்வரனின் அழைப்பை ஏற்று, தமிழ்நாடு பேரூர் ஆதீன முதல்வர் தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளாரும், அவரது குழுவினரும் எதிர்வரும் 27ஆம் திகதி இலங்கை வரவுள்ளனர்.

அடிகளாரும் அவரது குழுவினரும் தமது இந்த விஜயத்தின்போது யாழ்ப்பாணம் உட்பட நாட்டின் பல பாகங்களுக்கும் செல்லவுள்ளனர்.

கொழும்பிலிருந்து விமானம் மூலம யாழ்ப்பாணம் வரவுள்ள அடிகளார் யாழ்ப்பாணத்தில் தங்கியிருக்கும் காலத்தில் இங்குள்ள பிரதான ஆலயங்கள் மற்றும் நல்லூர் ஆதீனம் ஆகியவற்றுக்கு விஜயம் செய்து தரிசனம் செய்யவுள்ளதுடன்;அங்கு அருளுரைகள் பலவற்றையும் ஆற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கது.(தி-4)

# மனித உரிமை விழிப்புணர்வு கருத்தரங்குகளால் 888 பேர் பயன்

(யாழ்ப்பாணம்)

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் இவ்வாண்டு யாழ். மாவட்டத்தில் 20 மனித உரிமை விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் நடத்தப்பட்டுள்ளன.

யாழ். மாவட்டத்தில் மனித உரிமைகள் பேணப்படுதலின் அவசியத்தை வலியுறுத்தி, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தினால் கடந்த தைமாதம் தொடக்கம் ஒக்டோபர் வரை நடத்தப்பட்ட இவ் விழிப்புணர்வுக் கருத்தரங்குகளில் 888 பேர் பயனடைந்துள்ளனர்.

இதன்படி பாடசாலை மாணவர்களுக்காக நடத்தப்பட்ட 4 கருத்தரங்குகளில் 229 மாணவர்களும் அரச திணைக்கள உத்தியோகத்தர்களுக்காக நடத்தப்பட்ட 6 கருத்தரங்குகளில் 199 அரச உத்தியோகத்தர்கள் மற்றும் அதிகாரிகளும் இராணுவத்தினருக்காக நடத்தப்பட்ட 2 கருத்தரங்குகளில் 135 இராணுவ அதிகாரிகள் மற்றும் சிப்பாய்களும் பொலிஸாருக்காக நடத்திப்பட்ட 2 கருத்தரங்குகளில் 70 பொலிஸாரும் கடற்படையினருக்காக நடத்தப்பட்ட ஒரு கருத்தரங்கில் 52 கடற்படை அதிகாரிகளும்

ஆசிரியர்களுக்காக நடத்தப்பட்ட 3 கருத்தரங்குகளில் 163 ஆசிரியர்களும் இடம் பெயர்ந்த மக்களுக்காக நடத்தப்பட்ட ஒரு கருத்தரங்கில் 40 பொது மக்களும் கலந்து கொண்டு பயன்பெற்றுள்ளனர்.

ஆனால், பல்கலைக்கழக சமூகத்திற்காக யாழ். பல்கலைக்கழகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கருத்தரங்கில் மாணவர்கள் சமூகமளிக்காது புறக்கணித்தனர் என மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ். அலுவலகத்தால் வெளியிடப்பட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (தி-4)

# விடுதலைப் புலிகளுடனான ஒப்பந்தம் தனிமனிதர்களுக்கிடையிலானது அல்ல

## அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆதங்கம்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்கும் இடையே செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தம் இரண்டு தனி மனிதர்களுக்கிடையில் செய்து கொள்ளப்பட்டதல்ல என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சித்தலைவரும் கப்பல் துறை மற்றும் துறைமுக அபிவிருத்தி அமைச்சருமான ரவூப்ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்கும் இடையே கடந்த 2002 ஆம் ஆண்டு ஏப்பரல் மாதம் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தம் முறிந்துவிட்டது.

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் கடந்த 19 ஆம் திகதி கிழக்கிலங்கைப் பத்திரிகையாளர்களுக்கு தெரிவித்துள்ளமை குறித்து ஊடகம் ஒன்றிற்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுபற்றித் தொடர்ந்து கூறுகையில், தமிழீழ விடுதலைப்புலிகள் தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள் என்ற அடிப்படையிலும் முஸ்லிம் மக்களின் அதிகபட்ச ஆதரவைப் பெற்ற தரப்பு என்ற அடிப்படையிலும் செய்துகொள்ளப்பட்டது.

ஆனால் தமிழீழ விடுதலைப் புலிகளே இவ் ஒப்பந்தத்தை ஒருதலைப் பட்சமாக முறித்துவிட்டதுடன், அதற்கான அறிவிப்பையும் வெளியிட்டுள்ளனர்.

விடுதலைப்புலிகளின் இந்தத் திடீர் முடிவு நாட்டின் நலன்களையே பாதிக்கக்கூடும், அதுமட்டுமன்றி அவர்கள் எதிர்பார்க்கும் நிரந்தர சமாதானத்தைக்கூட இந்த முடிவு கேள்விக்குறிக்குள்ளாக்கிவிடும் என்பதை நான் மீண்டும் அவர்களுக்கு கூறிவைக்க விரும்புகின்றேன்.

அத்துடன், தமிழீழ விடுதலைப் புலிகளின் இத்தகைய திடீர் அறிவித்தல் முஸ்லிம் மக்கள் மத்தியில் கடும் அதிருப்தியையும் விசனத்தையும் ஏற்படுத்தியுள்ளது. புலிகளின் இவ்வாறான அறிவிப்பினால் முஸ்லிம் மக்கள் மத்தியில் நிலவி வருகின்ற நல்ல பிப்பிராயங்களையும் அவர்கள் இழக்க நேரிடும் என அவர் மேலும் தெரிவித்தார். (தி-61,10)

## இராசி பலன்

**25. 12. 2003**

**(மார்கழி 10, வியாழக்கிழமை)**

**துதியை முற்பகல் 11.55 மணிவரை**

**உத்தராடம் நள்ளிரவு 12.02மணிவரை**

**இராகுகாலம் 1.56-3.26 வரை**

**சுபநேரம் 7.56-9.26வரை**

**நத்தார் திருநாள்**

**மேடம்**
தொழில் நன்மை, நல்ல செய்தி, அதிகாரம், முயற்சி கைகூடும்.

**இடபம்**
பெரியோர் வெறுப்பு, காரிய தாமதம், சரீரப் பிரயாசை, தேசாந்திர வாசம்.

**மிதுனம்**
பிரயாண பயம், முயற்சி தடங்கல், உறவினர் வெறுப்பு, உடல் நலக்குறைவு.

**கடகம்**
சௌக்கிய விருத்தி, காரிய ஜெயம், போசன நன்மை, குடும்ப மகிழ்ச்சி.

**சிங்கம**
உடல் நலம், எடுத்த காரியம் கைகூடும், பகைவர் நேசம், கற்பனை மிகுதி.

**கன்னி**
மனச் சோர்வு, வியாபார விருத்தி, கௌரவக் குறைவு, காரிய தாமதம்.

**துலாம்**
தன்னம்பிக்கைக் குறைவு, முயற்சி தாமதம், எதிர்பாராத நன்மை, புத்திரரால் கவலை.

**விருச்சிகம்**
கூட்டு முயற்சி, பிரயாண நன்மை, தொழிலில் ஆர்வம், புதிய பொருள் சேர்க்கை.

**தனுசு**
உஷ்ண வியாதி, விதண்டாவாதம், தன விரயம், பிரயாணக் கஷ்டம்.

**மகரம்**
சயன சுகம், புதிய முயற்சி, தெய்வ சிந்தை, தேக நலன்.

**கும்பம்**
காரிய அலைச்சல், நல்ல மனை வாசம், நோய குணமடைதல், எதிர்பாராத நன்மை.

**மீனம்**
சந்தோசமான சம்பவம், பெருமையடைதல், புதிய திருப்பம், காரிய அனுகூலம்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

- வளவன்.

# வடமராட்சி கிழக்கிற்கு பிரதேச செயலகம் அவசியம்

(திருநெல்வேலி)

யாழ்.மாவட்டத்திலுள்ள உதவி அரசாங்க அதிபர் பணிமனைகளில் பெரும்பாலனவை பிரதேச செயலகங்களாக விரிவுபடுத்தப்பட்டுள்ளதால் வடமராட்சி கிழக்குப் பகுதிக்கும் பிரதேச செயலகம் ஒன்று இருப்பது அவசியம் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பணிமனை தற்போது தனியார் வீடொன்றில் எதுவித வசதிகளுமற்ற நிலையில் இயங்கிவருகிறது.அத்துடன், வளர்ந்து வரும் நவீன காலத்தில் கணனி வசதிகள் எதுவுமற்ற நிலையில் இப் பணிமனை தற்போது இயங்கி வருகிறது.

எனவே, சகல வசதிகளையும் உள்ளடக்கியதான பிரதேச செயலகம் ஒன்றை அமைத்து,அங்கு ஆளணி வளத்தையும் மேம்படுத்துமாறு வடமராட்சி கிழக்கு புனர்வாழ்வு புனரமைப்பு நிறுவனம் யாழ்.அரச அதிபரிடம் கோரிக்கை விடுத்துள்ளது. (தி-43)

# பெண்ணுரிமைக்குப் பாடுபட்ட மூன்று தமிழ்ப் பெண்களுக்கு விருது

(கொழும்பு)

இடம்பெயர்ந்த பெண்களுக்கு உதவியதற்காக 3 இலங்கைப் பெண்மணிகள் ஐ.நா.அகதிகள் நிறுவனத்தால் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளனர். அருணி அருள் சுப்பிரமணியம், சித்திரலேகா மௌன குரு, கமலாவதி ஆகியோரே இவர்களாவர். மகளிர் சமத்துவத்தை முன்னெடுத்ததற்காக இவ்விருது வழங்கப்படுகிறது என யு.என்.எச்.சி.ஆர்.வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சித்திரலேகா மௌனகுரு இலங்கையில் பெண்கள் உரிமைகளுக்காகத் தொழிற்படுகிறார். அத்துடன், இனப்பிரச்சினையின் போது பாதிக்கப்பட்டபெண்களுக்காக கிழக்கு மாகாணத்தில் செயற்படுகிறார். கிழக்குப் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளரான இவர், மட்டக்களப்பு சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலைய ஸ்தாபகர்களில் ஒருவர்.

கமலாவதி அனுராதபுர மாவட்டத்தில் பெண்கள் வலுவிழந்தோருக்கான சங்கத்தின் ஸ்தாபகரும் தலைவருமாகவுள்ளார். பெண்களுக்குரிய அடிப்படை உரிமைகளைப் பெற்றுக்கொடுக்கும் ஒரு நிறுவனமாக, இது விளங்குகிறது.

அருணி திருகோணமலை யு.என்.எச்.சி.ஆரில் பணிபுரிபவர்.பெண்களுக்கெதிரான வன்முறைகள் பற்றி அர்ப்பணிப்புடன் செயற்படுபவர்.இவர்கள் மூவரும் தமக்குரிய விருதினைப்பெற ஜெனீவா பயணமாகவுள்ளனர். இவர்கள யு.ன்.எச்.சி.ஆர்.உயர் ஸ்தானிகர் ரட்லப் போ்ஸிடமிருந்து விருதினைப் பெறுவார். (ந-6)

இருள்சேர் இருவினையும் சேரா
இறைவன்
பொருள் சேர் புகழ்புரிந்தார் மாட்டு
-குறள்-

வலம்புரி

## யேசு பாலனே வருக.....

மனுக்குலத்தின் பாவத்தைப் போக்க இப்பாரினில் வந்து உதித்த யேசு பாலனின் பிறப்பு இன்றாகும்.

உலகம் முழுவதிலுமுள்ள கோடிக்கணக்கான கிறிஸ்தவ மக்கள் யேசுபாலனின் பிறப்பைக் கொண்டாடுகின்றனர். மனுக்குலத்தை மீட்க பாரினில் வந்துதித்த யேசு பாலனின் பிறப்பை உலகம் முழுவதும் கொண்டாடுகின்ற போதிலும் யேசுவின் போதனைகள், அவர் காட்டிய பாதைகள் எவ்வளவு தூரம் மானிடத்தால் போற்றப்படுகிறது -பாதுகாக்கப்படுகின்றதென்ற கேள்விகள் எழவே செய்கின்றன.

மண்ணில் நல்ல வண்ணம் வாழ வேண்டிய மனித சமூகம் சீரிய பாதையை தவற விட்டு மந்தைக் கூட்டமாக அலைந்த போது மானிடத்தை மீட்டெடுப்பதற்காக உதித்த யேசு பாலகன் மனிதர்களின் பாவச் சுமைகளை தானே சுமந்தார்- சிலுவையில் அறையப்பட்டார். அவர் சிந்திய குருதி இந்த வையகததைப் புனிதப படுத்தியது. மானிடத்தை இறைவன்பால் ஈர்த்தது.

அவரின் இப் புனிதப்பணி நமக்கெல்லாம் ஓர் செய்தியை உரைத்து நிற்கிறது. எனினும் இதனை நாம மறந்து விட்டோம். சுய நலமும்-மதவாதமும் மேலோங்கி விட்டது. பாவச் சுமைகளால் மனித இனம் நசுங்கிப் போயுள்ளது. மீட்பா யாருமின்றி மனித இனம் இருள் சூழ்ந்த பாவக்குகைக்குள் அலைந்து திரிகின்றது.

எங்கும் மனிதக் கொலைகள்-சுரண்டல்கள்-ஏழைகளின் அவலக் குரல்கள்-பணக்காரரின் திமிறல்கள்-ஆண்டான் அடிமைமுறைகள்-இன.மொழி, மத, நிறபேதங்கள்-எந்தவகையிலும் நிமமதி அற்ற வாழ்க்கை. வையகத்தில் மகிழ்வோடு வாழ வேண்டிய மனிதர்கள் இவ்வாறு அவலப்பட்டு, அல்லல் பட்டு ஆற்றழிவதற்கு காரணம் தான் என்ன?

ஆம், மனித இனத்தை மீட்க வந்த மீட்பரின் போதனைகள் பெட்டிகளுக்குள் பூட்டப் பட்டு விட்டன. உன்னைப் போல் பிறரையும் நேசி என்ற உயர்ந்த வாசகம் கட்டட வாசல்களை அலங்கரிக்கும் வார்த்தைக் கோலங்களாக மாறி விட்டன. மனித மனங்கள் அழுக்காறு-அவா-வெகுளி-இன்னாற்சொல் என்ற பாவ விலங்கிற்குள் அகப்பட்டு விட்டது. அதனால் இறையருள்-புண்ணியம் உள்ளவர் உறவு-சகோதரத்துவம் என்ற உயரிய எண்ணக்கருக்கள் மறைந்து வெறும் எழுத்துருவங்களாக மாறிவிட்டன.

எனவே இந்த உலகம் மீள வேண்டுமாயின், சமாதானம் நிலைக்க வேண்டுமாயின், யேசுபாலன் மீண்டுமோர் தடவை இந்த வையகத்தில் உதிக்க வேண்டும். இதற்காக நல்ல உள்ளங்கள் தேவகுமாரனை இறைஞ்ச வேண்டும்.

# சித்தன்கேணி பரிவர்த்தனை நிலையத்தை மீண்டும் இயக்குமாறு அமைச்சருக்கு மகஜர்

(வட்டுக்கோட்டை)

வலிகாமம் மேற்கு மக்களின் நன்மைகருதி, தொலைத்தொடர்பு மத்திய பரிவர்த்தனை நிலையத்தை மீண்டும் அதன் சொந்த இடமான சித்தன்கேணியில் இயக்குவதற்கு உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு அப்பகுதி மககள் தொலைத்தொடர்பு அமைச்சருக்கு மகஜர் ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர்.

அப்பகுதி மக்கள் சுமார் ஆயிரமபேர் கையெழுத்திட்டு அனுப்பி வைத்துள்ள மேற்படி மகஜரில்,

கடந்த 1978ஆம் ஆண்டு சித்தன்கேணிச் சந்தியில் 4பரப்புக்காணி கொள்வனவு செய்யப்பட்டு, தொலைத்தொடர்பு மத்திய பரிவர்த்தனை நிலையக் கட்டடம் அமைக்கப்பட்டு, தனது சேவையை வழங்குவதறகு தயாா நிலையில் இருந்தது.

ஆயினும், அக்காலப் பகுதியில் குடாநாட்டில் இடம்பெற்ற யுத்த சூழ்நிலை காரணமாக இடம்பெயர்ந்த பண்டத்தரிப்பு இநதுக் கல்லூரி சில காலமாக இக கட்டடத்தில் இயங்கிவந்தது.

பின்னர் இப் பாடசாலை இக் கட்டடத்தை விட்டு வெளியேறிய தன பிற்பாடு அதன் ஒரு அறையை சித்தன்கேணி ஸ்ரீகணேசா வித்தியாலயம் தொலைத்தொடர்பு பரிவர்த்தனை நிலையத்தின் அனுமதி இன்றி தன்னிச்சையாக எடுத்து அதில் இயங்கிவருகிறது.

தற்போதைய சுமுகமான சூழ்நிலையை அடுத்து வலிகாமம் மேற்குப் பகுதியில் மக்கள் மீளக்குடியேறி வருகின்றனர்.

இந்த நிலையில் இப் பகுதி மக்கள் உள்ளநாட்டிலும் வெளிநாட்டிலும் உள்ள தமது உறவுகளுடன் தொடர்பை ஏற்படுத்துவதற்கு வசதியாக தொலைத் தொடர்பு பரிவர்த்தனை நிலையம் மீண்டும் அதன் சொந்த இடத்தில் இயங்க வேண்டும்.

இதேவேளை, சித்தன்கேணி ஸ்ரீகணேசா வித்தியாலயம் தொலைத தொடர்பு பரிவர்த்தனை நிலையக கட்டடத்தில் சட்டத்திற்குப் புறம்பாக அத்துமீறி இயங்கிவருவதுடன், பரிவர்த்தனை நிலையத்தையும் அதன் செயற்பாடுகளையும் விஸ்தரிக்கும் முயற்சிகளில ஈடுபட்டுவரும் அதிகாரிகளுக்கும் தடைவித்து வருகின்றது.

எனவே இதுகுறித்து உரிய கவனம் செலுத்தி சித்தன்கேணி ஸ்ரீகணேசா வித்தியாலயத்தை தொலைத்தொடர்பு பரிவர்த்தனை நிலையக் கட்டடத்தில் இருந்து அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அத்துடன், இக் கட்டடத்தில் தொலைத்தொடர்பு மத்திய பரிவாத்தனை நிலையத்தை இயக்கி அதன் செயற்பாடுகளை விஸ்தரிக்க நடவடிக்கை எடுக்க வேணடும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ந-70,89)

# மாகாணசபைத் தேர்தல்களில் புதிய இடதுசாரி முன்னணிக்கட்சி தனித்து போட்டியிட முடிவு

(கொழும்பு)

நடைபெறவுள்ள மாகாண சபைத் தேர்தல்களில் புதிய இடதுசாரி முன்னணிக்கட்சி, ஐக்கியதேசிய முன்னணி, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, மக்கள் விடுதலை முன்னணி ஆகிய கூட்டணிகளுக்கு எதிராக இடதுசாரி அணியாக தனித்துநின்று போட்டியிடத் தீர்மானித்துள்ளதாக அக் கட்சியின் தலைவர் விக்கிரமபாகு கருணாரெட்ண தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடந்த ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து பேசிய அவர் புதிய இடதுசாரி முன்னணியும், நவசமாஜக்கட்சியும் இனப் பிரச்சினை உட்பட தேசிய விவகாரங்கள் பற்றி ஆழமான கருத்துக்களைக் கொண்டுள்ளன.

இனப்பிரச்சினை தொடங்க முன்னரே இதுகுறித்து நாங்கள் எதிர்வுகூறி இருந்தோம்.

தமிழர்களுக்குரிய அதிகாரங்களை வழங்க வேண்டும் என எமது கட்சி அன்றுதொட்டு வலியுறுத்தி வருகிறது.

தற்போதும் தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக தமிழீழ விடுதலைப்புலிகளை ஏற்றுக்கொண்டு இடைக்கால நிர்வாகம் பற்றிய பேச்சுக்களை அரசு ஆரம்பிக்க வேண்டும்.

புலிகளின் இடைக்காலத் திட்ட வரைபைத் தென்பகுதியில் உள்ள அரசியல் தலைமையகம் ஏற்பதாக இல்லை. அது தொடர்பான கலந்துரையாடல்களை நடத்தவும் தயாராகஇல்லை.

அத்துடன் அதிகாரப் பரவலாக்கத்துக்கு மக்கள் விடுதலை முன்னணி ஒரு போதும் சம்மதிக்கமாட்டாது என்பதுடன் நாட்டின் இறைமையை பாதுகாக்கவும் அது ஒன்றிணைந்து செயற்படாது.

பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு இதுவே சிறந்த தருணம். இச் சந்தர்ப்பத்தைத் தவறவிடாது இருதரப்பினரும் பயன்படுத்த வேண்டும் என்றார். (தி-6)

# பத்திரிகை சபையைச் சீராக்க ஜனாதிபதி நடவடிக்கை

(கொழும்பு)

இலங்கைப் பத்திரிகைச்சபையை சீராக்கி மீண்டும் செயல்பட வைப்பதற்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தீர்மானித்துள்ளார்.

கல்விமான்கள், சட்டத்தரணிகள், ஊடகத்துறையின் முக்கிய பிரமுகர்கள் ஆகியோர் ஜனாதிபதியிடம் விடுத்த யோசனைக்கு அமையவே, இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

பாராளுமன்றச் சட்டத்திற்கு அமைய உருவாக்கப்பட்ட இப் பத்திரிகைச் சபை சட்ட ரீதியான அதிகாரங்கொண்ட நிறுவனம்.

இச் சபைக்கு மாற்றாக உருவாக்கப்பட்ட பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு அவ்வாறான அதிகாரங்களைக் கொண்டதல்ல என கல்விமான்கள், சட்டத்தரணிகள், ஊடகத்துறையின் முக்கிய பிரமுகர்கள் ஜனாதிபதிக்கு சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதற்கமைய வெற்றிடமாக வுள்ள பத்திரிகைச் சபையின் தலைமைப் பதவிக்கு விரைவில் பொருத்தமான ஒருவர் தெரிவு செய்யப்படுவார் என ஜனாதிபதி செயலக வட்டாரம் தெரிவித்துள்ளது. (தி-60,10)

# கருங்காலியில் இளைஞர் குழுக்கள் அட்டகாசம்

(காரைநகர்)

காரைநகர் கருங்காலிப் பகுதியில் மது போதையில் சென்ற இளைஞர் குழுவினர் வீடுகளுக்குள் புகுந்து அட்டகாசம்புரிந்த சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம்பற்றித் தெரிய வருவதாவது கடந்த வெள்ளிக்கிழமை இரவு கருங்காலி கிராமததில் மது போதையில் சென்ற இளைஞர் குழுவொன்று வீடுகளுக்குள் புகுந்து அட்டகாசம் புரிந்துள்ளதுடன் வீடுகளில் குடியிருக்கும் பெண்களை தகாத வார்த்தைகளில் பேசியதுடன் கொலை செய்யப்போவதாகவும் மிரட்டியுள்ளனர்.

இச்சம்பவத்தினால் பீதியடைந்த மக்கள் ஒன்று திரண்டு இளைஞர்குழுவினரை கருங்காலிப் பகுதியை விட்டு அகற்றினர். ஆனாலும் அவர்கள் கருங்காலிச் சந்தியில் நின்று பொதுமக்களுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

இதனையடுத்து அப்பகுதிக்கு விரைந்த பொலிஸ் உயரதிகாரிகள் கொண்ட குழுவும் கடற்படை அதிகாரிகளும் நிலைமைகளைக் கட்டுப்படுத்தினர். (தி-246)

# வடமராட்சி கிழக்கை கட்டியெழுப்பக் கோரிக்கை

(திருநெல்வேலி)

வடமராட்சி கிழக்குப் பகுதியின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு வடமராட்சி விவசாய அமைப்புக்களின் சம்மேளனம் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம். கே.சிவாஜிலிங்கத்திடம் கோரிக்கை ஒன்றை விடுத்துள்ளது.

வடமராட்சி கிழக்குப் பகுதியின் பொருளாதாரத்தை மையமாகவைத்து, அப்பகுதியின் பொருளாதாரச் செயற்பாடுகளை மேம்படுத்தும் நோக்கில் மணற்காடு மற்றும் மருதங்கேணி ஆகிய இடங்களில் இரு உல்லாசப் பிரயாண விடுதிகளை அமைக்க வேண்டும்.

அத்துடன், சுண்டிக்குளம் பகுதியில் பலகாலமாகக் கவனிப்பாரற்று சீரழிந்த நிலையில் இருந்துவரும் பறவைகள் மற்றும் விலங்குகள் சரணாலயத்தை விரைவில் புனரமைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் வடமராட்சி விவசாய அமைபபுக்களின் சம்மேளனம் கோரிக்கை விடுத்துள்ளது. (தி-43)




சாயி அருளமுதம்

தனது உண்மை நிலையான தெய்வீகத்தின் ஒளிக் கீற்றை வெளிப்படுத்துவதற்காகவே ஜீவி இந்தப் பிறவியெடுத்துள்ளது. உடலானது கடவுள் எனப்படும் நெய்க்காக ஏங்கும் விளக்கின் திரியாகும். பண்டசாலையிலுள்ள மற்றெல்லா உணவுப்பொருட்களையும் விலக்கி விட்டு பொறிக்குள் இருக்கும் எளிய வாசம் மிகுந்த இரையினால் கவரப்பட்டு தனது மௌடீகத்தினால் பொறியில் அகப்பட்டுக் கொள்ளும் எலியைப்போல மனிதனும் தனது உண்மையான ஆதாரத்தை அலட்சியப்படுத்தி அழிகின்ற செல்வத்தை நாடி உழன்று வாழ்க்கையை வீணாக்குகின்றான்.

நன்றி

நாளாந்த நற்சிந்தனை


# கூ.மொ.விற்பனை நிலையம் 5 இலட்சம் ரூபாவை நஷ்டஈடாக வழங்கியது

(கொழும்பு)

கூட்டுறவு மொத்த விற்பனை நிலைய ஸ்தாபன ஊழியர்களது மனித உரிமைகள் மீறல் மனுக்கள் தொடர்பாக மேற்படி ஸ்தாபனம் 5இலட்சம் ரூபாவுக்கும் அதிகமான தொகையை நஷ்டஈடாக இவ் வருடம் வழங்கியுள்ளது.

கூட்டுறவு ஊழியர்களுக்கு 55 வயதிற்கு மேல் சேவை நீடிப்பு வழங்கக் கூடாது என கூட்டுறவு மொதத விற்பனை நிலைய ஸ்தாபனம் மேற்கொண்ட தீர்மானத்திற்கு எதிராக ஸ்தாபனத்தின் 21 ஊழியர்கள் மனித உரிமைகள் மீறல் மனுக்களை உயர் நீதிமன்றில் தாக்கல் செய்திருந்தனர்.

இதனை ஆராய்ந்த பிரதம நீதியரசர் சரத் என் சில்வா தலைமையிலான ட்ரயல் அட்பார் இந்த நஷ்டஈட்டுக் கொடுப்பனவுத் தீர்ப்பினை அண்மையில் வழங்கியது. இத் தீர்ப்பிற்கு அமையவே கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபனம் 5 இலட்சத்திற்கும் அதிகமான தொகையை நஷ்டஈடாக வழங்கியுள்ளது. (தி-60,10)

## ஒளிவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் திருமறைக் கலாமன்றம் நடத்தும் ஒளிவிழா எதிர்வரும் 28ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4.00 மணிக்கு மறைக்கல்வி நடுநிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் யேசுபிரானின் பிறப்பை அறிவிக்கும் நாடகம், நடனங்கள் மற்றும் இசை நிகழ்ச்சி என்பன இடம்பெறவுள்ளன. (இ)

## தமிழர்களை..

யினர் கருத்து வெளியிட்டிருப்பதன் மூலம், அவர்கள் எந்த அளவுக்கு இனவாதக் கொள்கையை கடைப்பிடிக்கிறார்கள் என்பதை தெளிவுபடுத்துவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். முதலாளித்துவ ரீதியில் பார்த்தாலும், ஜனநாயக ரீதியில் பார்த்தாலும் இது போன்ற வதை முகாம்களை அமைப்பது மனிதாபிமானமற்ற சட்டவிரோதச் செயலாகும் என்று அவர் மேலும் கூறினார். (வ)

## முகமாலை...

இதேவேளை மன்னார் உயிலங்குளம் மற்றும் ஓமந்தை சோதனைச் சாவடிகள் ஊடாகப் பொதுமக்கள் இரவு 9.30 மணிவரை போக்குவரத்தில் ஈடுபட்டு இருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

விடுதலைப்புலிகள் பண்டிகைக் காலத்தை முன்னிட்டு இரவு 9.30 மணிவரை தமது சோதனைச் சாவடிகள் திறக்கப்பட்டிருக்கும் என்று அறிவித்துள்ளமை தெரிந்ததே. (ச.43.64)

## சமாதான..

லாம் தீர்வுகாண்பதே எம்முன் எழுந்துள்ள பிரச்சினையாகும்.

நாட்டுக்கு இன்று ஏற்பட்டுள்ள எல்லாத் தேவைகளையும் விட அரசியல் ஸ்திரமே இன்றைய அவசிய தேவையாகும்; நவம்பர் மாதம் 4ம் திகதி இடம் பெற்ற சம்பவத்தினால் யுத்தம் ஒன்று மீண்டும் ஆரம்பிக்குமா? இல்லையா? என்ற சந்தேகம் எழுந்துள்ளது என்றும் அமைச்சர் பீரிஸ் மேலும் தெரிவித்துள்ளார். (ம)

## அமைச்சர்..

பேசும் ஊடகவியலாளர் மத்தியில் கருத்துத் தெரிவித்த தமிழ்ச்செல்வன், ஹக்கீமுக்கும் பிரபாகரனுக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தம் இனிமேல் செல்லாதென்று தெரிவித்திருந்தார்.

இதனைத் தொடர்ந்து ஹக்கீம் ஒப்பந்தத்தை புலிகள் மீறிவிட்டனர் என்று குற்றம் சாட்டியுள்ளார். மேலும் இடைக்கால நிர்வாகத்திற்கான முஸ்லிம் காங்கிரசின் பிரேரணைகள் அடுத்த ஜனவரிமாத முடிவிற்குள் பூர்த்தியாக்கப்படும் என்றும், இப்பிரேரணைகள் அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் அனுப்பி வைக்கப்படும் என்றும் தெரிவித்தார். (இ-6)

## கேளிக்கை நிகழ்வில் புறக்கணித்ததால் பிரதேச செயலரை எம்.பி தாக்கினார்

### விசாரணைக்கு பிரதமர் உத்தரவு

(கொழும்பு)

கடந்த 5ஆம் திகதி அன்று ஐ.தே.மு. எம்.பி. லகஷ்மன் விஜயமானவினால் புளத் சிங்கள பிரதேச செயலாளர் தாக்கப்பட்ட விடயம் பற்றி விசாரணை செய்யும்படி பிரதமர் மூன்று பேர் கொண்ட குழுவை நியமித்துள்ளார்.

இக்குழுவில் ஓய்வு பெற்ற மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிச் சேவை அலுவலர்,உள்நாட்டு விவகார அமைச்சின் மேலதிக செயலாளர், முன்னாள திறைசேரிச் செயலாளரும் தற்போதைய பொது நிர்வாக சேவைப்பணிப்பாளர் ஆகியோரும் அடங்குவர்.

புளத்சிங்கள பிரதேசத்தின் ஐ.தே.க பிரதம அமைப்பாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான லகஷ்மன் விஜயமானவும் மேல் மாகாண சபை கவுண்சிலர் சேனக சமரநாயக்கவும் இவர்களது ஆதரவாளர்களும் களுத்துறை மாவட்டத்தில் கேளிக்கை நிகழ்ச்சி ஒன்றிற்கு சென்றிருந்தவேளை மேற்படி பிரதேச செயலாளரை தாக்கியிருந்தனர்.

அன்றைய தினமே மாலை தொழில் அமைச்சர் மஹிந்தசமரசிங்காவுடன் சேர்ந்து தனக்கு சிறப்பான வரவேற்பளித்த பிரதேச செயலர், இரவு நடந்த கேளிக்கை நிகழ்ச்சியில் தம்மை கவனிக்கவில்லை என குற்றம் சாட்டியே தாககப்பட்டார். இதனையொட்டி களுததுறை மாவட்டத்தில் 2000க்கும் அதிகமான பொதுமக்களும் குருமாரும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்திலும் வேலைநிறுத்தப் போராட்டத்திலும ஈடுபட்டு இருந்தனர்.(த-6)


கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை
செல்வி மாதினி நாகரட்ணம் அவர்களின்
பாசம் மிகு தந்தையார்
வல்லிபுரம் நாகரட்ணம்
(மானிப்பாய் ப.நோ.கூ.ச.முன்னாள் காசாளர்)
அவர்களின் திடீர் மறைவையிட்டு துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

யா/வியாவில் சைவ வித்தியாலயம் அதிபர்,
காரைநகர் -(8059) ஆசிரியர்கள், மாணவர்கள்.

தென் பகுதிக்கு சுற்றுலாச் செல்ல அரிய சந்தர்ப்பம்

யாழ்.மக்களே!

கண்டி, திருகோணமலை, கோணேஸ்வரம், கிண்ணியா, வெள்ளைக்கடற்கரை, நுவரெலியா, கதிர்காமம் ஆகிய இடங்களை சுற்றிப்பார்க்க உங்களை அழைத்துச் செல்கிறார்கள்.

K.P.ரவல்ஸ்
சங்கரத்தைச் சந்தி, வட்டுக்கோட்டை

சுற்றுலாச் செய்ய விரும்புவோர் உங்கள் பெயர்களை எதிர்வரும் 28ம் திகதிக்கு முன்னர் பதிவு செய்து கொள்ளவும்.

எதிர்வரும் 30ம் திகதி உங்கள் வீடுகளுக்கு வந்தே அழைத்துச் சென்று, பின்னர் வீட்டிலேயே கொண்டு வந்து இறக்கப்படும்.

குளிரூட்டப்பட்ட பஸ்ஸில் சுகமாகச் சுற்றுலாச்செய்ய தொடர்பு கொள்ளுங்கள்

K.P.ரவல்ஸ்
சங்கரத்தைச் சந்தி வட்டுக்கோட்டை
தொலைபேசி: 021-222 3038, 0777 111725

அனைவருக்கும் சுறவு நத்தார்-புதுவருட நல்வாழ்த்துக்களை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்

திருமறைக் கலாமன்றம்
நடத்தும்
ஒளிவிழா

28-12-2003 ஞாயிற்றுக்கிழமை மாலை 4.00 மணி
மறைக்கல்வி நடுநிலைய மண்டபம்

நிகழ்ச்சிகள்: நாடகம், நடனங்கள், இசை நிகழ்ச்சி

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

திருமறைக் கலாமன்றம்
(c/7063) 238, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

அனைவருக்கும் எமது நத்தார் வாழ்த்துக்கள்

சொலெக்ஸ் மூக்குக் கண்ணாடியகம்




ஆம்;
தற்பொழுது யாழ். ஆஸ்பத்திரி வீதியில் (O.P.D முன்பாக) நவீன காட்சி அறையுடன் தமது சேவையை ஆரம்பித்துள்ளார்கள்
- கண்பரிசோதித்து நவீன பிறேம்களில் கண்ணாடிகளைப் பெற்றுக் கொள்ளல்
- காலநிலைக்கு ஏற்ப கலர் மாறக் கூடிய சண்கிளாஸ் வகைகளை நியாய விலையில்பெற்றுக் கொள்ளல்
- அதி சிறந்த வகையான சங்குப் பற்களை கட்டிக் கொள்ளவும் மிதப்புப் பற்களுக்கு கிளிப் போட்டுக் கொள்ளவும்

உங்கள் தெரிவு
சொலெக்ஸ் மூக்குக் கண்ணாடியகம்

FREE EYE TESTING

கிளை:-
232/A கண்டி வீதி,
சாவகச்சேரி

516, ஆஸ்பத்திரி வீதி,
(O.P.D முன்பாக)
யாழ்ப்பாணம். 0777 -855328

(சி-6550)

NEW SCIENCE HALL

கன்னாதிட்டி யாழ்ப்பாணம்

A/L 2006

கணித, உயிரியல் பிரிவு

(எமது வழமையான ஆசிரியர் குழு)

ஆரம்பம்: 28-12-2003

[C/6657] குறிப்பு: 24-12-2003 இல் இருந்து அனுமதிகள் வழங்கப்படுகின்றன


இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.12.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.